# எதிரொலி
ETHIROLI
ஆஸ்திரேலியா

குரல் 05 அதிர்வு 60 ஆனி 2022 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

Transco CARGO
We love to deliver
SHIPPING SCHEDULE
THE ONLY COMPANY WITH WEEKLY SHIPMENTS TO SRI LANKA
Online Tracking
SMS & Email arrival notice notification
Live chat on Website
Transco App

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| JUN 04 | JUL 12 |
| JUN 11* | JUL 19 |
| JUN 18 | JUL 26 |
| JUN 25* | AUG 02 |
| JUL 02 | AUG 09 |
| JUL 09* | AUG 16 |
| JUL 16 | AUG 23 |
| JUL 23* | AUG 30 |
| JUL 30* | SEP 06 |

1300 187 267
TranscoCargo.com.au
*Exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

## 1500 நாட்கள் தடுப்பின் மீட்சியில்...



we make a special for you
Wedding Deco
Traditional wedding Deco
Engagement Deco
Puberty Ceremony Deco
Birthday Deco
Baby Shower Deco
and ets...
OUR SERVICE STATE
Victoria
Canberra
RK ROYAL EVENTS & DECORE
நீங்கள் விரும்பும் வடிவில் தருகிறோம்
திருமண அலங்காரம்
பாரம்பரிய திருமண அலங்காரம்
நிச்சயதார்த்த அலங்காரம்
பூப்புனித நீராட்டு விழா அலங்காரம்
பிறந்தநாள் அலங்காரம்
வளைகாப்பு அலங்காரம்
மற்றும் பல...
RATHEESH P
Event Coordinator and ets...
0452 428321
03 97002687
rkroyalevents@gmail.com
RKroyalevents&decore

EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
DANDENONG
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
Bala 0420 877 303
GOLD LOAN
Need some Emergency Fund
Don't worry we have got you covered!

ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம்
## ‘டன்டினொங்’ இல்
## புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
சம்பத் வங்கி Sampath Bank
UNION BANK
Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


ISODIA TAX
ACCOUNTING AND TAX
QUALIFIED TAX AGENTS
TAX PRACTITIONERS BOARD REGISTERED
CHARTERED ACCOUNTANTS AUSTRALIA + NEW ZEALAND
வரி கணக்கை தாக்கல் செய்ய
$99
மட்டுமே
எங்கள் சேவைகள்
வருமான வரி தாக்கல்
வணிக வரி (BAS) தாக்கல்
வணிக எண்ணை (ABN) அமைத்தல்
சுயமாக நிர்வகிக்கப்படும் வருங்கால கருணைத்தொகை உதவி
(Setting up Self Managed Super Funds)
மேலும் விவரங்களுக்கு அழைக்கவும் !
03 8772 2557 | 0421 279 530 (DAN)
isodia.tax@gmail.com
THE HUB ARCADE, SUITE 4 SHOP 7 / 131 – 147 Walker St, Dandenong VIC 3175


PRAKAHS
GOLD BUYERS
தங்கம் ஈடு
வைக்கும் நிலையம்
உங்கள் அவசரப்பணத்தேவைக்கு உடனடித் தீர்வு!
வட்டி விகிதம் 3%
தங்கம் வாங்கும் இடம்
டனிஸ்டன் 0421 279 530
127 Walker St, Dandenong, VIC-3175.
prakahsgold@gmail.com
www.prakahsgold.com
/PrakahsGold
MON- SAT 10 AM - 5:30 PM
CLOSED SUNDAYS AND PUBLIC HOLIDAYS

# கச்சதீவு - தமிழர் தீவுகளை ஆக்கிரமிக்கும் இந்தியா

ஜெரா



இலங்கையின் தலையாக அமைந்திருக்கும் யாழ்ப்பாணத் தீபகற்பமானது மக்கள் வசிக்கத்தக்க எட்டுத் தீவுகளைத் தன்வசம் கொண்டிருக்கிறது. அதில் நெடுந்தீவுக்கு அண்மையாகக் காணப்படுவதே கச்சதீவு . 285 ஏக்கர் பரப்புடைய இத்தீவில் நீண்டகாலமாகவே மனிதர்கள் தொடர்ச்சியாக வாழவில்லை. ஆயினும் இலங்கை - தமிழக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையின்போது தங்கிச் செல்வதற்காக இத்தீவைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். பிரித்தானியர் வருகையைத் தொடர்ந்து தேசிய அளவில் உருவான “அகன்ற இந்தியா” தேசவுருவாக்கத்தில் மீனவர்களிடமிருந்த கச்சதீவு இந்திய எல்லைக்குள் கொண்டுசெல்லப்பட்டது. 1974 ஆம் ஆண்டில் இந்தியா - இலங்கையிடையே மேற்கொள்ளப்பட்ட “இந்தியா - சிறீலங்கா கடல் எல்லை ஒப்பந்தத்தின்படி“ இத்தீவு மீண்டும் இலங்கைக்கு வழங்கப்பட்டது. அவ்வாறு இலங்கைக்கு வழங்கப்பட்டபோதிலும், தமிழக மீனவர்கள் அதில் தங்கி ஓய்வெடுக்கவும், மீன்பிடிக்கவும், வலைகளை உலரவைக்கவும், புனித அந்தோனியார் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபடவுமான அனுமதியினை உடன்படிக்கை ஏற்படுத்திக்கொடுத்திருந்தது.

இந்த உடன்படிக்கையை அப்போதைய தமிழக முதல்வராக இருந்த மு.கருணாநிதி எதிர்த்தார். சட்டசபையில், ”இந்தியாவுக்கு சொந்தமானது என நாம் கருதுவதும், தமிழ்நாட்டிற்கு மிக நெருங்கிய உரித்துடையதுமான கச்சதீவு விடயத்தில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு குறித்து ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சதீவில் இந்தியாவுக்கு இருக்கும் அரசுரிமையை நிலைநாட்டும் வகையில் அதை திருத்தியமைத்துத் தமிழக மக்களின் உணர்வுக்கு மதிப்பளிக்கும்படி வலியுறுத்துகிறோம்” எனத்




தீர்மானம் இயற்றினார்.

அதனைத் தொடர்ந்து கச்சதீவை மீட்கவேண்டும், இந்தியா தனதுடைமையாக்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் இந்தியாவில் மிக நீண்டகாலமாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றன. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழத்தின் செயலாளர் வைகோ இது குறித்துப் பேசாத போராட்டங்களே கிடையாது. கூடவே தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை கடற்படை துப்பாக்கி வேட்டை நடத்தும்போது தமிழக மீனவர்களும் இக்கோரிக்கையினை முன்வைப்பர்.

இப்போது மீண்டும் கச்சதீவை இந்தியா மீட்கவேண்டும் என்கிற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் தமிழகம் வந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் முன்னிலையில் ”கடலோர மீனவ சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், கச்சதீவை மீட்டெடுத்து, மீனவ மக்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் அவர்களின் உரிமையை நிலைநாட்ட, உரிய நடவடிக்கை எடுக்க இது தகுந்த நேரம் என்பதைப் பிரதமருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்” என்றார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். அவரது கோரிக்கையில், கச்சதீவை மீட்பதற்கு “இது தகுந்த நேரம்” என்பதில் தான் இலங்கை தொடர்பான அண்மைய அரசியலின் மொத்தத் தந்திரங்களும் வெளிப்பட்டிருக்கின்றன.

இலங்கை என்றுமில்லாத பொருளாதார வீழ்ச்சியை சந்தித்திருக்கிறது. இனி மீளவே பல வருடங்கள் ஆகலாம், ஆகாமலும் போகலாம் என்கிற மதிப்பீட்டினைக கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரச் சரிவைப் பயன்படுத்தி பல நாடுகள் தம் அறுவடையை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. அதில் சீனா, இந்தியா போன்ற நாடுகள் முதன்மையானவை. கடனுக்கு மேல் கடனைக் கொடுத்து இலங்கையின் மேல், தென் பாகங்களில் இருக்கின்ற கேந்திர முக்கியத்துவமுள்ள இடங்கள் அனைத்தையும் சீனா அபகரித்துக்கொண்டிருக்கிறது.

மறுபுறத்தில், இலங்கையின் வடக்கு, கிழக்கின் கேந்திர முக்கியத்துவமுள்ள பகுதிகளை இலக்குவைத்து இந்தியா நன்கொடைகளையும், கடன்களையும் வாரி இறைத்துக்கொண்டிருக்கின்றது. திருகோணமலைத் துறைமுகத்தின் சில பகுதிகள் எரிபொருள் தாங்கிகளை மீளமைப்பதற்கான நடவடிக்கைக்காகவும், திருக்கோணமலையின் சம்பூர் கிராமத்திற்குரிய 500 ஏக்கர் நிலம் மீள்புதுப்பிக்க சக்தியுடன் கூடிய மின்னுற்பத்திக்காகவும், பூநகரி கடற்கரைப் பகுதி (சீனா கடலட்டை பண்ணை அமைத்திருந்த பகுதி) காற்றாலை மின் உற்பத்திக்காகவும், மன்னார் குடா பகுதி காற்றாலை மின் உற்பத்திக்காகவும், நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு போன்றன மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியுடன் கூடிய மின்னுற்பத்திக்காகவும் இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த வழங்கல்கள் அனைத்தும் கடந்த ஆறு மாதகாலங்களுக்குள்ளேயே நடந்துமிருக்கின்றன. அதாவது இலங்கையில் பொருளாதாரச் சரிவின் விளைவை தாங்கிக்கொள்ளாத சிங்கள மக்கள் தெருவில் இறங்கிப் போராடத் தொடங்கிய பின்னர், ஏற்பட்ட அரசியல் ஸ்திரத் தன்மையைப் பயன்படுத்தி இந்தியா வழங்கிய அவசர உதவிகளுக்கு பிரதியுபகாரமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மேற்குறித்த கேந்திர முக்கியத்துவமிக்க இடங்கள் அந்நாட்டுக்குத் தாரைவார்க்கப்பட்டிருக்கின்றன. இத்தகையை தாரைவார்ப்புக்களுக்கு முறைப்படியான உடன்படிக்கைகள் எவையும் பொதுமக்கள் அறிந்து கொள்ளக்கூடிய விதத்தில் இடம்பெறவுமில்லை. வெறும் திரைமறைவு உடன்படிக்கைகளாகவே இவ்வளவும் நடந்திருக்கின்றன. அதாவது இலங்கையின் பொருளாதாரச் சரிவை இந்தியா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி இத்தீவின் தனக்குத் தேவைப்படும் அனைத்து இடங்களையும் ஆக்கிரமித்துள்ளது. அதனையே தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் “ இது தகுந்த நேரம்” எனக் குறிப்பிடுகின்றார். இந்தக் கடன்பொறியைப் பயன்படுத்தியே கச்சதீவையும் மீட்டு விட வேண்டும் என்கிறார்.

ஆனால் வடக்கு, கிழக்கின் மீனவர்களோ இதனை முற்றாக எதிர்க்கின்றனர். வடக்கு- கிழக்கு தேசிய மீனவர் சங்கத்தின் இணைப்பாளர் முரளிதரன் இதனை பின்வருமாறு விவரிக்கிறார். “இந்திய மீனவர்களின் அட்டூழியங்கள் இன்னமும் தொடர்ந்துகொண்டிருக்கு. பருத்தித்துறை முனை வரைக்கும் வந்து மீன்பிடிக்கிறாங்கள். வலைகளை அறுக்கிறாங்கள். தடைசெய்யப்பட்ட அத்தனை மீன்பிடி முறைகளையும் பாவிச்சி எங்கட கடல் வளத்தை அழிச்சிக்கொண்டிருக்கிறாங்கள். இந்த நிலையில கச்சதீவையும் தங்களுக்குத் தரச்சொல்லிக் கேட்கிறது, கருணாநிதி குடும்பம் ஈழத்தமிழர்களுக்கு செய்யும் இன்னொரு துரோகம். கச்சதீவை இந்தியாவுக்கு கொடுத்திட்டால் நெடுந்தீவு, இரணைதீவு, மன்னார், பாஷையூர், குருநகர், மண்டைதீவு என எல்லா இடங்களுக்கும், கரைக்கே வந்து இந்திய ட்ரோலர்கள் தங்கி நின்று மீன்பிடிக்கும். எங்களுக்கு இப்ப சிறுகடல் தொழிலுகள் மட்டும் தான் மிஞ்சிக்கிடக்கு. அவங்கள் கச்சதீவில் வந்து குடியேறி இருந்து கொண்டு, இங்க மாதக்கணக்கில் தங்கி நின்று கிடக்கிறதெல்லாத்தையும் அரிச்சிக்கொண்டு போவாங்கள்” என்றார்.

கச்சதீவு உடன்படிக்கைக் கைச்சாத்தாகி அரைநூற்றாண்டினை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. இவ்வளவு காலமும், உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளபடியேதான் தமிழக - இலங்கை தமிழ் மீனவர்கள் செயற்பட்டு வருகின்றனர். அந்தோனியார் தேவாலயத் திருவிழாவில் சம பங்குடன் கலந்துகொள்கின்றனர். தமது உறவினைப் புதுப்பித்துக்கொள்கின்றனர். என்னதான் கடலில் வளச் சுரண்டல் சண்டைகள் இருப்பினும், கச்சதீவு விடயத்தில் இரு தரப்பினரும் ஒற்றுமையாகவே நடந்துகொள்கின்றனர். மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்திக் கொள்கின்றனர். இவ்வாறு கிடக்கும் ஒரு தீவை இந்தியா மீளவும் உரிமைகோருவது தவறானது. எந்த சக்தியும் ஆக்கிரமித்துக்கொள்ளாமல் அதனை அப்படியே விட்டுவிடுவதுதான் நல்லது.

ஆனால் இலங்கையின் பொருளாதாரச் சரிவானது, இந்தியாவின் புவிசார் அரசியல் ஒழுங்கின் பாதுகாப்பை தக்கவைப்பதற்காக உருவாக்கப்பட்டதோ என்று சந்தேகிக்குமளவிற்கு இந்தியாவின் அண்மைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. இந்திய பொருளாதார நலன்களுக்குத் தடையாக இருந்த புலிகளை வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்து அகற்றி, இலங்கையின் தெற்கில் தமது பொம்மையாட்சியை நிறுவி, அதனை சீர்குலையச் செய்து, இத்தீவை மொத்தமாக ஆக்கிரமிக்க மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கையின் பின்னணியிலேயே தமிழர்களுக்கு சொந்தமான தீவுக்கூட்டங்கள் இந்தியாவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன போலும். கச்சதீவை ஆக்கிரமிப்பது இந்தியாவின் அடுத்த பெரும் பாய்ச்சலாகும்.


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

ஆஸ்திரேலியா ETHIROLI

குரல்:05 அதிர்வு: 60 ஆனி 2022 தொ.பே:1800 960 162


## உள்ளே ஒளிந்திருக்கும் சா'தீ!'

தவறான செயலொன்று நம்முன்னே நடக்கும் போது அதனை எதிர்க்காமல், மௌனிப்பது கூட அந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருப்பதற்குச் சமனானதே. மாறாக, 'நடுநிலை வகித்தேன்' என அதனை நியாயப்படுத்த முடியாது. அப்படி ஒரு சம்பவம் அண்மையில் நடைபெற்றது. சிட்னியில் இருந்து ஒலிபரப்பாகும் வானொலி ஒன்று, இலங்கையில் இருக்கும் தமிழ்த் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நேரலையூடாக செவ்வி கண்டது. இதன்போது ஒரு சந்தர்ப்பத்தில், கஜேந்திர குமரை கேள்வி கேட்டவரை, வானொலியின் அறிவிப்பாளர் சாதிரீதியாக கீழ்த்தரமான சொற்கள் மூலம் வசைபாடிய சம்பவம் ஒன்று அண்மையில் நிகழந்தது. ஒரு முற்போக்கான, மக்களுக்காக பாடுபடும், மக்களின் விடுதலையை விரும்பும் ஒரு அரசியல்வாதி இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன செய்திருக்க வேண்டும்? 'இப்படி சாதிய வன்மத்தைக் கக்குவது தவறு. என் அரசியல் எதிரிகளக் கூட இப்படி சாதியத்தின் பெயரால் கேவலப்படுத்தக் கூடாது' என்று அந்த அறிவிப்பாளருக்கு சொல்லியிருக்க வேண்டும். ஆனால் கஜேந்திரகுமார் எம்.பி அதைச் செய்யவேயில்லை. அறிவிப்பாளரின் சாதிய ஊளையிடலுக்கு ஒத்தூதுவது போன்று அமைதியாக இருந்துவிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி, தமிழ்த் தேசிய முன்னணியை உருவாக்கி, இன்றைக்கு அந்தக் கட்சி இரண்டு நாடாளுன்மன்ற உறுப்பினர்களைப் பெறுமளவுக்கு, மக்களிடம் தன் செல்வாக்கை நிலைநிறுத்தியுள்ள கஜேந்திரகுமார் எம்.பி, இப்படி சாதிய ரீதியான அனுகு முறைகளைத் தடுக்காதிருப்பது ஏன்? இனவிடுதலை என்பது வர்க்க விடுதலையில் இருந்தே பிறக்கும். வர்க்கம் என்னும் போது தனியே அது பொருளாதார ரீதியாக முதலாளி–தொழிலாளி என்ற வர்க்கங்களை மட்டும் சுட்டுவது கிடையாது. வர்க்க விடுதலை என்னும் போது சாதி ரீதியான சுரண்டல்களில் இருந்து விடுபடலையும் உள்ளடக்கியே நிற்கும். தமிழ் மக்களின் இனரீதியான விடுதலைக்காக அரசியல்வழியில் உழைப்பதாகச் சொல்லிக்கொள்ளும் ஒருவர், இப்படி பகிரங்கவெளி ஒன்றில், சாதிய வக்கிரத்துக்கு எதிராக குரல் கொடுக்காமல் அமைதியாக இருப்பது நியாயமில்லை.

தன் எதிர்முகாமைச் சேர்ந்தவர்களை அந்த அறிவிப்பாளர் வசைபாடுவதால் , அதை கேட்டு கஜேந்திரகுமார் ரசித்திருக்கவும் கூடும். ஆனால் அந்த நிகழ்ச்சியைக் கேட்டுக்கொண்டிருந்த கஜேந்திரகுமாரின் அனுதாபிகள் எவரும் ஒருபோதும் அவரின் செய்கையை ரசித்திருக்கமாட்டார்கள். எம்மினம் இன்னும் தாழ்வுற்று, வறுமை விஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டு நிற்பதற்கான காரணிகள் இந்த சாதிய வன்மமும் மிகமுக்கியமான காரணம். அவ்வாறான ஒரு விஷச செடி வளர்வதைப் பற்றி எவ்வித அக்கறையுமில்லாமல், அது இன்னும் தொடர்ந்து செழித்து வளர மறைமுக ஆதரவு கொடுக்கும் ஒருவர் , எப்படி எம்மினத்துக்கான விடுதலை பற்றிப் பேசும் தகுதியைக் கொண்டிருக்க முடியும்? கஜேந்திரகுமார் என்னதான் வெளியே தன்னை ஒரு அரசியல் போராளியாகக் காட்டிக் கொண்டாலும், அவருக்குள் இன்னமும் அதே ஆதிக்க சாதியத் தீ அணையாமல் இருப்பதைத்தான் இந்தச் சம்பவமும் எடுத்துக்காட்டியுள்ளது. இனியாவது அவர் தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.இல்லையேல் மக்கள் மாற்றிக் காட்டிவிடுவார் கள்.

# லிங்கன் க்ரோவ்லி திரும்பிப் பார்த்த சரித்திரம்



● அ.முத்துக்கிருஷ்ணன்

ஆஸ்திரேலியாவின் வரலாற்றில் முதல் முறையாக ஒரு ஆஸ்திரேலியப் பூர்வகுடியை சேர்ந்த ஒருவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்றிருக்கிறார். லிங்கன் க்ரோவ்லி தான் அந்த வரலாற்றுப் பெருமைக்குச் சொந்தக்காரர். அவர் குயின்ஸ்லாந்து மாகாணத்தில் உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றது ஒரு பெரும் வரலாற்று நிகழ்வு, ஒருசரித்திர அங்கீகாரம்.

வடக்கு குயின்ஸ்லாந்தில் வளர்ந்த லிங்கன் க்ரோவ்லி வடக்கு மாகாணத்தின் வாராமுங்கா குழுவை (Warramunga) சேர்ந்தவர், க்ரோவ்லியின் தகப்பனார் ஒரு இராணுவ வீரர். க்ரோவ்லி டவுஸ்வைல் அருகில் உள்ள சார்டர்ஸ் டவர்சில் வளர்ந்தார். 11ஆம் ஆண்டு படிப்பை நிறைவு செய்யும் நேரம் அவரது ஆசிரியருடன் ஏற்பட்ட பிணக்கின் காரணமாக பள்ளியில் இருந்து க்ரோவ்லி நீக்கப்பட்டார். அவரை அழைத்து பேசிய பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியர், "நீ ஒரு அபாரிஜின் (பூர்வகுடி) தானே, பொதுவாக நீங்கள் ஒரு நாள் சிறைச்சாலைக்கு செல்பவர்கள் தானே" என்று எள்ளலாகச் சொல்லியிருக்கிறார்.

"அப்போது எனக்கு அந்த நேரத்தில் எதுவுமே தெரியாது, பல்கலைகழகத்தில் பயிலும் ஒருவரையும் நான் அன்று அறிந்திருக்கவில்லை. பல்கலைக்கழகம், பாடங்கள் குறிப்பான சட்டப்படிப்பு என்பதை எல்லாம் நான் ஒரு போதும் கேள்விப்பட்டதேயில்லை "என்று அந்தச் சம்பவத்தை நினைவு கூர்கிறார் க்ரோவ்லி. ஆனால் அந்தச் சம்பவத்தின் பின்னர் க்ரோவ்லி ஆளே மாறிப்போனார். தன்னையும், தன் சமூகத்தையும் இகழ்ந்தவர்களுக்கு, தன் கல்வி மூலம் பாடம் புகட்ட நினைத்தார்.

வாழ்வின் ஓட்டத்தில் ஜேம்ஸ் குக் பல்கலைகழகத்தில் லிங்கன் க்ரோவ்லி சட்டம் பயின்றார். அபாரிஜின் மற்றும் டாரஸ் ஸ்ட்ரெயிட் தீவினருக்கான சட்ட உதவி மையத்தில் அவர் வேலை செய்தார். இந்த நேரத்தில் தான் அவர் அபாரிஜின் மக்களுக்கு தேவைப்படும் சட்ட உதவிகள், அவர்களின் துயர நிலை போன்றவற்றை அறிந்து கொண்டார். அத்துடன் அரசு நிர்வாகத்தில் உள்ள பலரிடமும் அபாரிஜின்கள் குறித்து தவறான கருத்தியலே இருப்பதையும் உணர்ந்து அதை மாற்ற முடிவெடுத்தார்.

2003 இல் அவர் வழக்கறிஞராகப் பதிவு பெற்றார். அதன் பிறகு பிரிஸ்பேன், சிட்னியில் அவர் தொடர்ந்து வழக்காடினார். பாகுபாடுகள் எதிராகவும், வேலைவாய்ப்பு, குற்றம் மற்றும் தனிப்பட்ட காயங்கள் (personal injury) தொடர்பான வழக்குகளிலும் அவர் நிபுணத்துவம் பெற்றவராக வளர்ந்தார். 2018 இல் அரசு வழக்கறிஞராக (Queens Counsel) நியமிப்பட்ட அவர் ஆஸ்திரேலியா முழுமைக்கும் உள்ள நீதிமன்றங்களில் மிகத் திறமையாக வாதிட்டிருக்கிறார். குறிப்பாக குயின்ஸ்லாந்து, நியு சவுத் வேல்ஸ், விக்டோரியா நீதிமன்றங்களில் நடைபெற்ற முக்கியமான கிரிமினல் வழக்குகளில் இவர் வாதிட்டமை குறிப்பிடத்தகக்கது.

லிங்கன் க்ரோவ்லி தற்சமயம் Bar Association of Queensland's Indigenous Barristers Committee, Crown Prosecutor for the Commonwealth Director of Public Prosecutions- Sydney,Principal Crown Prosecutor - Maroochy Chambers- (Queensland Office) Director of Public Prosecutors என்பதான பல்வேறு பொறுப்புகளை வகித்து வருகிறார்.

"பொதுவாக ஆஸ்திரேலிய நீதித்துறையில் அபாரிஜின்கள் மற்றும் டாரஸ் ஸ்ட்ரெயிட் தீவுகளை சேர்ந்தவர்கள் மிக குறைவாகவே பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறார்கள். நான் எனது அபார்ஜின தொன்மை குறித்து வம்சாவளி குறித்தும் பெருமிதம் கொள்கிறேன், நீதிமன்றம் மற்றும் அரசு நிர்வாகக் கட்டமைப்புக்குள் எங்கள் சமூகம் குறித்த ஒரு புரிதலை ஏற்படுத்த எப்போதும் பணி செய்து கிடப்பேன்" என்கிற அவரது வார்த்தைகள் இன்னும் நம்பிக்கையளிக்கின்றன.

பொதுவாகவே என் ஆஸ்திரேலியப் பயணத்தில் ஏராளமான நண்பர்களின் வீடுகள் உரையாடிய நேரம் ,

லிங்கன் க்ரோவ்லியின் பள்ளி உதவித் தலைமை ஆசிரியர் கூறிய அதே வார்த்தைகளையே என் நண்பர்கள் பலர் கூறினார்கள். அப்போது நான் 'அபாரிஜின்களை சந்திக்க விரும்புகிறேன், அவர்களைக் குறித்து இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ள நினைக்கிறேன் ' என்ற போது 'அவர்கள் வன்முறையானவர்கள், குடிப்பவர்கள், குடித்துவிட்டு தெருவில் கிடப்பவர்கள், கல்வி அறிவு அற்றவர்கள், நாகரிகமற்றவர்கள்' என்கிற இந்த வார்த்தைகளையே 98% வீடுகளில் கேட்டேன், இது எனக்கு பெரும் அவநம்பிக்கையை ஏற்படுத்தியது.

ஆனால் அதே தமிழ்க் குடும்பங்களில் உள்ள அடுத்த தலைமுறை குழந்தைகளுடன் உரையாடியபோது அவர்கள் அனைவரும் 'இது அபாரிஜின நிலம், அவர்களின் நிலத்தில் தான் நாம் வசிக்கிறோம், நாம் அவர்களை அவர்களின் பண்பாட்டை மதிக்க வேண்டும்' என்று சொன்னபோது அந்தக் குழந்தைகளை என் நெஞ்சோடு அணைத்துக் கொண்டேன்.நிச்சயம் வரும் தலைமுறைகளில் இந்தப் புரிதல் இன்னும் விரிவடையும் மேம்படும். ■

# தடம் மாறும் தேர்



கார்த்திக்வேலு

இங்கே தேர்தல் வந்ததும் தெரியவில்லை போனதும் தெரியவில்லையே ?” இப்படி சொன்னவர் சமீபத்தில் ஆஸி குடியுரிமை பெற்று வாக்களித்திருக்கும் நண்பர் ஒருவர் . அவர் இப்படி சொன்னதில் ஆச்சரியமில்லை. இதுவே பிற ஆசிய நாடுகளில் பிறந்து அங்கு நடக்கும் தேர்தல்களை காணப்பெற்ற அனைவரின் எண்ணமாகவும் இருந்திருக்கும் .

ஆஸி அரசியல் வரலாற்றில் நெடுங்காலமாக இரண்டு கட்சி ஆட்சியே நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது . லிபரல் கட்சி வலதுசாரி தரப்பு என்றால் லேபர் கட்சியை இடதுசாரி தரப்பு என்று சொல்லலாம். வேறு சில கட்சிகள் களத்தில் இருந்தாலும் அவை மிகச்சிறிய உதிரிக் கட்சிகளே. கூட்டணியில் பங்கு வகிப்பதைத் தவிர தனித்த ஒரு அரசியல் மாற்றாக உருவாகி வரமுடியாதவை. எனவே இங்கு வாக்கு அரசியல் என்பது இந்த இரண்டு தரப்புக்கும் இடையே நடக்கும் போட்டி என்ற அளவிலேயே முடிந்துபோய்விடும் நிலை இருந்தது.

1950-60 கள் வரை ஆங்காங்கே சுயேச்சைகளும் ஓரிரு தொகுதியில் வென்று வந்தார்கள். ஆனால் அதன் பின்னான காலகட்டத்தில் பெரும் அரசியல் ஒருங் கிணைவு நிகழ்ந்து இந்த இரண்டு கட்சிகளுமே தத்தமது அரசியல் பலத்தை விரிவாக்கி நிலை நிறுத்திக்கொண்ட காலம் . இந்தக் காலகட்டத்தில் தான் எந்தத் தொகுதியில் யாருக்கு ஆதரவு என்பது கிட்டத்தட்ட அனைவருக்குமே தெரிந்த ஒரு ரகசியம் என்றாகிவிட்டது . மேலும் மக்கள் தொகையில் பெரிய மாற்றம் நிகழாத காலமானதால் ஒரு தொகுதியின் வாக்காளர்கள் என்ற அளவில் அதிக மாற்றங்கள் நிகழவில்லை.

தேர்தலின் யார் வெல்வார்கள்? என்பது ஒரு 10-15 தொகுதிகளில் யார் வெல்வார்கள் என்பதைப் பொறுத்தே அமையும் சூழல் உருவாகிவிட்டது. இந்த ‘ஊசலாடும் தொகுதிகள்’ (marginal seats) - எந்தப் பக்கமும் சாயக்கூடியவை, இரண்டு கட்சிக்கும் கிட்டத்தட்ட சம ஆதரவை கொண்ட தொகுதிகள் . மாறாக பெரும்பாலான பிற தொகுதிகள் ‘உறுதியான தொகுதிகள்’ (safe seats), அதாவது போன தேர்தலில் வென்ற கட்சியே இந்த முறை யும் வெல்லும் வாய்ப்பைக் கொண்டிருக்கும்.

எனவே தீவிரமான தேர்தல் செயற்பாடு, பிரசாரம் என்பதெல்லாம் அந்த 10-15 தொகுதிகளை மட்டுமே குறிவைத்து நடக்கும், ஒவ்வொரு வீட்டிலும் கதவை தட்டி வாக்கு சேகரிப்பதெல்லாம் இங்குதான். மற்றபடி பிற தொகுதிகளில் யார் வெல்வார்கள் என்று ஓரளவு ஊகிக்க முடிவதால் தேர்தல் என்பது கிட்டத்தட்ட ஒரு சடங்கு மட்டுமே என்பதாக இருக்கும் .

வியாபார மேலாண்மையில் இரட்டைப்படை போட்டி (Duopoly) என்று சொல்வார்கள். ஒரு தொழில் அல்லது சேவையில் இரண்டு நிறுவனங்கள் மட்டுமே போட்டி போடும் நிலை. உதாரணமாக சூப்பர் மார்க்கெட் தொழிலில் ஆல்டி நிறுவனம் வருவதற்கும் முன்னர் வரை வுல்வோர்த்ஸ் மற்றும் கோல்ஸ் கடைகளே கோலோச்சின . இந்த இரண்டு கடைகளும் ஒன்றுடன் ஒன்று போட்டி போடுபவை என்றாலும் காலப்போக்கில் அவர்களுக்கு இடையே பெரிய வித்தியாசம் இல்லாமல் போய்விட்டது. .சில சமயம் அவர்களுக்குள்ளே ஒரு புரிந்துணர்வு இருக்கும் - ஒரு குறிப்பிட்ட பொருளின் விலையை ஒரு அளவுக்கு மேல் இருவருமே குறைக்கக் கூடாது என்று. அரசியலிலும் அப்படியான ஒரு சூழ்நிலை தான் நிலவிற்று - காலப்போக்கில் லிபரல், லேபர் என்று இந்த இரண்டு கட்சிகளுக்கு இடையே பெரிய வித்தியாசம் இல்லை என்னும் நிலை உருவாகிவிட்டது.

ஆனால் இந்த முறை தேர்தல் முடிவுகள் இந்த அடிப்படையைக் கலைத்து போட்டிருக்கின்றன. அந்த விதத்தில் இது கடந்த 30-40 ஆண்டுகளில் நடந்த முக்கியமான தேர்தல் என்று சொல்ல வேண்டும். லேபர் கட்சி தான் இந்த முறை ஆட்சியை பிடித்தது என்றாலும்.

லிபரல் கட்சியின் கோட்டையாக இருந்த பல தொகுதிகளில் சுயேச்சை வேட்பாளர்கள் வென்று அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளனர். அப்படி வென்ற 10 சுயேச்சை வேட்பாளர்களில் 9 பேர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் என்ன கொள்கைகளை முன்வைத்து இவர்கள் வென்றார்கள் என்பது இன்னுமே முக்கியமானது - காலநிலை மாற்றம் மற்றும் அரசியல் ஊழல் கண்காணிப்பு அமைப்பு நிறுவுதல் (ICAC).

இந்தக் கொள்கைகள் குறித்து இரண்டு பெரிய கட்சிகளும் தொடர்ந்து சுணக்கம் காட்டி வந்த சூழலில், நாங்களே இதை முன்வைத்து கொள்கை உருவாக்கும் இடத்துக்கு வருவோம் என்று தேர்தலில் வென்று நாடாளுமன்றத்துக்கு வந்திருக்கிறார்கள் இந்த சுயேச்சை வேட்பாளர்கள். இவர்கள் எல்லோரும் தனித்து போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர்கள் என்றாலும் இவர்களை கூட்டாக டீல் (Teal ) வேட்பாளர்கள் என்கிறார்கள். டீல் என்பது இங்கு வண்ணத்தை குறிக்கும் சொல். பச்சையும் நீலமும் கலந்தால் கிடைக்கும் வண்ணம். அதாவது லிபரல் கட்சியின் நீல வண்ணமும், கிரீன் கட்சியின் பச்சை வண்ணமும் கலந்தால் கிடைப்பது. நடைமுறையிலும் இது பொருத்தமான விளியே. இவர்கள் பெற்ற பெரும்பாலான வாக்குகள் லிபரல் கட்சிக்கு போயிருக்க வேண்டிய வாக்குகள், அத்தோடு இவர்கள் கிரீன்கட்சி போலவே காலநிலை மாற்றத்தை முக்கிய கொள்கையாகக் கொண்டவர்கள்.

கடந்த முப்பது ஆண்டுகளில் இவ்வளவு சுயேச்சை வேட்பாளர்கள் எந்தத் தேர்தலிலும் வென்று வந்ததில்லை. இதுவரை ஆஸி அரசியல் என்பது ஒரு திருவிழாத் தேரைப் போல மெல்ல அசைந்து வந்திருக்கிறது. அவ்வப்போது இடது ,வலது என்று சாய்ந்தாலும் அது போகும் தெருவும் திசையும் ஒன்றாகவே இருந்திருக்கிறது. ஆனால் இந்தத் தேர்தல், அதில் உருவாகிய சுயேச்சை வேட்பாளர்களின் எழுச்சி அந்தத் தேரை சட்டென்று ஒடித்து வேறொரு தெருவில் , வேறொரு திசை நோக்கி இறக்கி விட்டிருக்கிறது, இனி காலநிலை மாற்றம் என்பது வெறும் வாய்ப்பேச்சாக மட்டுமே யாரும் பேசிக்கொண்டிருக்க முடியாது. அதே போல ICAC உருவாக்குவது குறித்தும் மக்கள் கறாராக இருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

ஒன்பது வருட இடைவெளிக்குப்பின் பின் லேபர் கட்சி ஆட்சிக்கு வந்திருந்தாலும் இது அவர்களுக்கு மெச்சத்தகுந்த வெற்றி என்றெல்லாம் கொண்டாடுவதற்கில்லை . இந்த வெற்றி அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு வாய்ப்பு என்று தான் நாம் கொள்ள வேண்டும் . ஆஸி மக்களின் எதிர்பார்ப்பையும் கோரிக்கைகளையும் மனதில் கொண்டு நடந்தால் மட்டுமே அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள முடியும் என்பதற்கான எச்சரிக்கை என்றும் இதை சொல்லலாம்.

பொது வாழ்வில், குறிப்பாக அரசியலில் பெண்கள் உவந்து ஈடுபடவும் இந்த தேர்தல் ஒரு நல்ல சமிக் ஞையை அளித்திருக்கிறது. அதே போல் பல்லின கலாசார பின்னணியில் இருந்தும் இம்முறை பலர் நாடாளுமன்றத்துக்கு வரவிருக்கிறார்கள். இலங்கையில் பிறந்த தமிழ் ஆஸ்திரேலியரான டாக்டர் மிஷல் ஆனந்த-ராஜா வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

லேபர் கட்சி தலைவர் ஆந்தனி அல்பனீசி பிரதமராக பதவி ஏற்றுக்கொள்ளும் போது கடவுளையோ, இங்கிலாந்து அரசியையோ குறிப்பிடாமல் விட்டது ஒரு உறுதியான தொடக்கமாக பார்க்கப்படுகிறது. ஆனால் அவர் வரும் மாதங்களில் எதிர்கொள்ளவிருக்கும் சவால்கள் அவ்வளவு எளிதானவை அல்ல. புதிய நிலக்கரிச் சுரங்கங்களை அனுமதிப்பது, கார்பன் எமிஷன் அளவுகளை விரைவாக குறைப்பதற்கான அழுத்தம், சீனாவுடனும் , பசுபிக் நாடுக-ளுடனும் உறவுகளை மேம்படுத்துவது என்று பல சவால்கள் காத்திருக்கின்றன.

தேர் தடம் மாறியிருக்கலாம், ஆனால் அதன் முன் இன்னும் பல தடைகள் இருக்கவே செய்கின்றன.



# ஆஸ்திரேலிய அமைச்சரவை


The Hon. Anthony Albanese MP
(Prime Ministe)

## Cabinet



The Hon. Richard Marles MP
(Deputy Prime Minister
Minister for Defence)


Senator the Hon. Penny Wong
(Minister for Foreign Affairs)


Senator the Hon. Katy Gallagher
(Minister for Finance
Minister for the Public Service
Minister for Women)


The Hon. Dr Jim Chalmers MP
(Treasurer)


Senator the Hon. Don Farrell
(Minister for Trade and Tourism
Special Minister of State)


The Hon. Tony Burke MP
(Minister for Employment and Work-place Relations, Minister for the Arts)


The Hon. Mark Butler MP
(Minister for Health and Aged Care)


The Hon. Chris Bowen MP
(Minister for Climate Change and Energy)



The Hon. Tanya Plibersek MP
(Minister for the Environment and Water)


The Hon. Catherine King MP
(Minister for Infrastructure, Transport, Regional Development and Local Government)


The Hon. Linda Burney MP
(Minister for Indigenous Australians)


The Hon.Amanda Rishworth MP
(Minister for Social Services)


The Hon. Bill Shorten MP
(Minister for the National Disability Insurance Scheme
Minister for Government Services)


The Hon. Mark Dreyfus QC MP
(Attorney-General, Cabinet Secretary)


The Hon. Brendan O'Connor MP
(Minister for Skills and Training)


The Hon. Jason Clare MP
Minister for Education



The Hon. Julie Collins MP
(Minister for Housing
Minister for Homelessness
Minister for Small Business)


Michelle Rowland MP
Minister for Communications


Madeleine King MP
Minister for Resources
Minister for Northern Australia


Senator Murray Watt
Minister for Agriculture, Fisheries and Forestry
Minister for Emergency Management


Ed Husic MP
Minister for Industry and Science


Clare O'Neil MP
Minister for Home Affairs
Minister for Cyber Security

## Outer Ministry


Andrew Giles MP
Minister for Immigration, Citizenship and Multicultural Affairs


Anika Wells MP
Minister for Aged Care
Minister for Sport


Anne Aly MP
Minister for Early Childhood Education
Minister for Youth


Stephen Jones MP
Assistant Treasurer
Minister for Financial Services


Kristy McBain MP
Minister for Regional Development, Local Government and Territories


Matt Keogh MP
Minister for Veterans' Affairs
Minister for Defence Personnel


Pat Conroy MP
Minister for Defence Industry
Minister for International Development and the Pacific

# ஆணென்ன பெண்ணென்ன..!

ஆஸ்திரேலிய சரித்திரத்திலே என்றும் இல்லாத அளவுக்கு நடப்பு அரசில் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் . இந்த முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 38 சதவிகிதமானோர் பெண்கள். முக்கியமாக இதில் 19 பேர் புதிய முகங்கள், முதன் முறையாக நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்கள் . இவ்வாறு புதிய முகங்கள் அதுவும் பெண்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெற்றிருப்பது மிகவும் நேர்மறையான விஷயமாகும் .

அமைச்சரவையிலும் இந்த முறை மிக அதிகமான பெண்கள் பங்கேற்றிருக்கிறார்கள். மொத்தம் உள்ள 28 அமைச்சரவையில் 10 இடங்களுக்கு பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அமைச்சரவை என்பது பல முக்கிய அரசு திட்டங்கள் கொள்கை முடிவுகள் எடுக்கப்படும் இடம் . இதில் பெண்களின் குரலுக்கு ஒரு இடம் கிடைத்திருக்கிறது என்பது ஆஸி அரசியலுக்கு ஒரு ஆக்கபூர்வமான திருப்பம் என்றுதான் சொல்ல வேண்டும்.

பெண்களை பிரதிநிதித்துவப்படுத்துவதில் ஆஸியை ஒத்த OECD பிற நாடுகளை (OECD countries)



ஒப்பு நோக்க நாம் பின் தங்கியே வந்திருக்கிறோம். ஏழு OECD நாடுகளில் அமைச்சர் பதவிகளில் 50 சதவிகிதத்துக்கு மேல் பெண்கள் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது . மேலும் பூர்வகுடியினரை சார்ந்த முதல் பெண் அமைச்சர் , முதல் இஸ்லாமியப் பெண் பிரதிநிதி,முதல் தமிழ் வம்சாவளியை சார்ந்த பெண் பிரதிநிதி என்று பல முதல்களை கொண்டது இந்த அரசு.

ஒரு வகையில் பார்த்தால் இவைகள் வெறும் எண்ணிக்கைகளே . ஒவ்வொரு நாட்டுக்கும் அதற்கான ஒரு "அரசியல் கலாசாரம்" என்று உள்ளது. அதிகமாக பெண்கள் பங்கேற்பது இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுமா? என்பது நம்முன் உள்ள முக்கியமான கேள்வி. இனவாதம் பேசும் தீவிர வலது சாரி கட்சியான ஒன் நேஷன் கட்சியின் தலைவரும் ஒரு பெண் தான் என்பதை மறந்துவிடக்கூடாது. இன்று நாம் காண்பது பால் சமத்துவத்துக்கு கிடைத்திருக்கும் வெற்றி. இதுவே சரியான அரசியல் சமத்துவமான, பல்லின சமத்துவமாக, சமூக சமத்துவமாக மலரும் நாள் தான் இந்த மாற்றத்துக்கான உண்மையான வெற்றியாக அமையும்.



# கச்சதீவு: கசக்கும் உண்மைகள்



கச்சதீவு, இந்தியத் தீபகற்பத்துக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ளது. இதே தீபகற்ப பகுதியில் ராமேஸ்வரம், குத்துக்கால் தீவு, குருசடித் தீவு, இராமசாமித் தீவு, மணலித் தீவு, நடுத் தீவு, பள்ளித் தீவு, முயல் தீவு, உப்புத்தண்ணி தீவு, அப்பா தீவு என பல தீவுகள் உள்ளன. இதில் 285 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த கச்சதீவு மட்டும் 1974 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. கச் தீவு ஒப்பந்தப்படி, தற்போது இலங்கைக்கு சொந்தமாக உள்ளது. தமிழக அரசியலில் அவ்வப்போது கச்சதீவு ஒரு பாடுபொருளாக மாறும் .அதன் பின் இடம் தெரியாமல் காணாமல் போகும்.

ராமநாதபுரம் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த 8 தீவுகளில் கச்சதீவும் ஒன்றாகும். ராமநாதபுரம் மன்னர் சேதுபதி அவர்களிடம் 1882 ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி (THE EAST INDIA COMPANY) குத்தகை ஒப்பந்தத்தில் கச்சதீவை எடுத்துள்ளது. அதன் பின்னர் கீழக்கரையைச் சேர்ந்த அப்துல் காதர் என்பவர், மணலித் தீவு, குத்துக்கல் தீவு மற்றும் கச்சதீவு மூன்றினையும் அப்போதைய, மெட்ராஸ் பிரசிடென்ஸியின் (MADRAS PRESIDENCY OF INDIA) ராமநாதபுரம் கலக்டரிடம் குத்தகை ஒப்பந்தம் மூலம் பெற்றுள்ளார். 1913 இல், மீண்டும் ஒரு லீஸ் ஒப்பந்தத்தை மெட்ராஸ் பிரசிடென்ஸி ஏற்படுத்தியது. அதன்படி, மெட்ராஸ் பிரசிடென்ஸியின் மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை கச்சதீவின் மீது கொடுக்கப்பட்டுள்ளது. 1939 இல் புனித அந்தோனியார் ஆலயம் கச்சதீவில் கட்டப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, முகம்மது என்பவர் 1947 இல் கச்சத் தீவை ஒரு குத்தகை ஒப்பந்தம் மூலம் எடுத்துள்ளார். ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது.

ராமநாதபுரம் ஜமீனின் ஆவணங்களைக் காட்டி அன்றைய தி.மு.க. அரசு கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தம் என்று கடுமையாக வாதிட்டது. ஆனால் மத்திய அரசு இந்த வாதங்களை ஏற்கவில்லை. கச்சதீவின் மீதான வரலாற்று உரிமை இந்தியாவிடம் இருந்ததா? என ஆராயும்படி இந்திரா காந்தி ஒரு குழு அமைத்தார். 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இந்திய பிரதமர் இந்திராகாந்தி, இந்திய அரசுக்கு சொந்தமான கச்சதீவை இலங்கைக்கு ஒப்பந்தம் மூலம் கொடுத்தது. தொடர்ந்து பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் இந்தியா நோக்கி வந்து கொண்டிருந்த நேரத்தில், ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் தமிழர்களுக்கு இலங்கை குடியுரிமை பெற்றுக்கொடுத்ததன் கைமாறாகவும், அப்பொழுதைய இந்தியா-பாகிஸ்தான் மோதல்களில் இலங்கை, இந்தியா பக்கம் நிற்கச் செய்யவும் ஓர் உத்தியாகவே இந்தத் தீவின் உரிமை விட்டு கொடுக்கப்பட்டது.

1974-76 ஒப்பந்தங்களில் ஒப்பந்தத் திகதியிலிருந்து 10 வருடங்களுக்கு இந்திய மீனவர்கள் தீவுப்பகுதியில் மீன் பிடிக்கவும், வலைகளை காயவைக்கவும், வழிபாடு நடத்த தீவுக்குச் சென்று வருவதற்கும் அனுமதி இருக்கிறது. இருப்பினும் 10 வருடங்களின் பின் இந்த அனுமதி இல்லாத நிலையில் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுகிறார்கள் என்கிற பிரச்சினையும், கடந்த இருபது ஆண்டுகளாக தொடர்ந்து இந்திய மீனவர்களின் மீன்பிடிப் படகுகள், அவர்களின் உடமைகள் இலங்கை இராணுவத்தால் தொடர்ந்து சேதப்படுத்தப்படுவதும், மீனவர்கள் சுட்டுப்படுகொலை செய்யப்படுவதும் சர்வசாதாரணமான, தினசரி நிகழ்வு போல் நடைபெற்று வருகின்றன. 1984 இல் ராமேஸ்வரம் மீனவர் முனியசாமி இலங்கை கடற்படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்தார். கடந்த 38 ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 4000-க்கும் மேற்பட்ட தாக்குதல்களை தமிழக மீனவர்கள் சந்தித்துள்ளனர்.

ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இந்திய உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கைத் தொடர்ந்தார். அந்த வழக்கில், 'கச்சதீவு தொடார்பாக 1974 மற்றும் 1976-ல் ஏற்படுத்தப்பட்ட இரு ஒப்பந்தங்களையும் ரத்து செய்து உத்தரவிடப்பட வேண்டும். கச்சதீவு மீண்டும் இந்தியாவின் அங்கமாக்கப்பட வேண்டும். ஏனெனில், மேற்படி கச்சதீவு தாரை வார்ப்புக்கு இந்திய நாடாளுமன்றத்தில் இரு அவைகளைக் கூட்டி ஒப்புதல் பெறப்படவில்லை' என்று வழக்கு தொடுத்தார். இதில் 1960 இல் மேற்கு வங்காளத்தின் ஒரு பகுதியை பாகிஸ்தானுக்கு மத்திய அரசு கொடுக்க முயன்றபோது அதைத் தடுத்து உத்தரவிட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மேற்கோளும் காட்டியுள்ளார் ஜெயலலிதா. மேலும் CONVENTION OF LAW OF THE SEA ன் படி ஐ.நா. சபையின் முடிவுகளை தனது வழக்கில் சாதகமாக எடுத்து வைத்தார்.

மோடி ஆட்சிக்கு வந்தால் இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகள் நடுங்கும் என்றார்கள், மோடி ஆட்சிக்கு வந்த பிறகும் இலங்கை கடற்படை தமிழக மீனவர்களை தாக்குவது குறைவில்லாமல் நடைபெறுகிறது. மத்திய அரசால் மட்டுமே இதனை மீட்க முடியும் என்கிற எளிய உண்மையைகூட அறியாமல் தமிழக பாஜக, இதனை தமிழ்நாட்டு முதல்வர் ஸ்டாலின் மீட்க வேண்டும் என்று தொடர்ந்து கூறுவது பெரும் அரசியல் நகைச்சுவை. நம் மீனவர்கள் கொல்லப்படும் போது அவர்கள் தமிழக மீனவர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள், ஒரு போது இந்திய மீனவர்கள் என்று அவர்களை இந்திய ஊடகங்களோ, தமிழக ஊடகங்களோ அழைத்தது கூட இல்லை என்பது இன்றைக்கும் மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது. அதே வேளையில் குஜராத் மீனவர்களை பாகிஸ்தான் கடற்படை தாக்கிவிட்டால் இந்தியாவின் தேசிய ஊடகங்கள் அவர்களை இந்திய மீனவர்கள் என்று அழைத்து உடன் பிரேக்கிங் நியூஸ் போடுகின்றன என்றால் இதில் உள்ள பாகுபாடுகளை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

கச்சதீவையும் அதனைச் சுற்றியுள்ள கடற் பகுதிகளையும் இந்தியா ,இலங்கையிடமிருந்து நீண்ட கால குத்தகைக்கு எடுப்பது நம் மீனவர்களுக்கு அந்த பகுதியில் மீன்பிடிக்க உரிமங்கள் வழகலாம், இம்மாதிரி ஒரு உரிமத்தை வழங்குவது அந்தப் பகுதியில் மீன் பிடித்தல் தொடர்பாக எழுப்பப்படும் சிக்கல்களுக்கு ஒரு தீர்வாக அமையலாம். ஆனால் இதனை எல்லாம் பிரதமர் மோடி தான் செய்ய வேண்டும் . ஏனெனில் வெளியுறவு விவகாரங்கள் எல்லாம் மத்திய அரசின் ஆளுகையின் கீழ் வருகிறது என்பதை தமிழக பா.ஜ.க.வினருக்கு யாராவது வகுப்பெடுக்க வேண்டும்.

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# மெல்லென கொல்லுமா நீதி?



சூழியன்

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவரும், ராஜபக்சக்களின் சகாவுமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அளித்த பொதுமன்னிப்பை இடைநிறுத்தி, இலங்கை உயர் நீதிமன்றம் மே 31 ஆம் திகதி பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவானது, தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அதுமட்டுமல்ல நீதிக்காக போராடிக்கொண்டிருப்பவர்களுக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் அளித்துள்ளது.

நீதித்துறைக்கு கடிவாளம் போடக்கூடிய அதிகாரம்கூட அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது. இதன்பிரகாரம் பிரதம நீதியரசர் நியமனம், நீதியரசர்கள் நியமனம், பதவி உயர்வு உள்ளிட்ட விடயங்கள் ஜனாதிபதியின் தலையீட்டுடன்தான் இடம்பெற வேண்டும் என்ற நிலை இருந்தும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் முடிவையே நீதித்துறை சவாலுக்குட்படுத்தியமை இலங்கையில் வரலாற்று முக்கியத்துவமிக்க நிகழ்வாக - முக்கியமான திருப்புமுனையாக - கருதப்படுகின்றது.

## படுகொலை - கைது - நடந்தது என்ன?

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிகாலத்தில் கட்டங்கட்டமாக தேர்தல்கள் நடத்தப்படுவது வழமை. அந்தவகையில் 2011 ஒக்ரோபர் 08 ஆம் திகதி உள்ளாட்சிமன்றத் தேர்தல் நடைபெற்றது.

வாக்களிப்பு தினத்தன்று, முல்லேரியா பகுதி மினி போர்க்களமாக மாறியது. ஆளுங்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட துமிந்த சில்வாவுக்கும், மஹிந்த ராஜபக்சவின் தொழிற் சங்க ஆலோசகராக செயற்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவுக்குமிடையில் மோதல் வெடித்தது. படைபட்டாளத்துடன்தான் இருவரும் களமிறங்கியிருந்தனர். பரஸ்பர துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர உட்பட நால்வர் நடுவீதியில் சுட்டு கொல்லப்பட்டனர். துமிந்த சில்வா உட்பட மேலும் சிலர் படுகாயமடைந்தனர். இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற பயங்கரமான அரசியல் படுகொலைச் சம்பவமாக இது பார்க்கப்பட்டது. படுகாயமடைந்த துமிந்த சில்வா மேலதிக சிகிச்சைகளுக்காக சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டார்.

சிகிச்சைகளின் பின்னர் 2013 மார்ச்சில் துமிந்த சில்வா நாடு திரும்பினார். சி.ஐ.டி.யினர் அவரை கைது செய்தனர். கைதான காலப்பகுதியில் சிறைச்சாலை வைத்தியசாலையில் துமிந்த சுகபோகம் அனுபவித்தார். பின்னர் ஏப்ரல் மாதம் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர் துமிந்த சில்வா உட்பட 13 பேருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில், சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்தார். 17 குற்றச்சாட்டுகள் அவர் மீது முன்வைக்கப்பட்டன.

## மேல் நீதிமன்றத் தீர்ப்பும் மேன்முறையீடும்

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகள் மூவரின் முன்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவில், 2016 செப்ரெம்பர் 08 ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. துமிந்த சில்வா உட்பட ஐவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் துமிந்த சில்வா தரப்பால் மேன்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரித்த ஐந்து நீதியரசர்களைக் கொண்ட குழாம், 2018 ஒக்ரோபர் 11 ஆம் திகதி தனது தீர்ப்பை அறிவித்தது. துமிந்த சில்வா உள்ளிட்ட மூவரின் மரணதண்டனையை உறுதிப்படுத்திய உயர்நீதிமன்றம், இந்த வழக்கின் முதலாவது எதிரியை விடுதலை செய்து உத்தரவிட்டது. ஜானக பிரியந்த என்ற குற்றவாளி தொடர்ந்தும் தலைமறைவாகவே உள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவுக்கு, 2021 ஜனவரி 24 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பொதுமன்னிப்பு வழங்கினார். இதற்குக் கடும் எதிர்ப்புகள் வலுத்தன. உலக நாடுகள் எதிர்த்தன. எனினும், தனது சகாவான துமிந்தவை, ஜனாதிபதி கோட்டா விடுவித்தார். ஜனாதிபதி தேர்தலின்போது துமிந்த சில்வாவின் குடும்பத் தொலைக்காட்சியொன்று, கோட்டாவுக்காக தீவிர பரப்புரைகளை முன்னெடுத்திருந்தது. அதற்கான நன்றிக்கடனுக்காகவே துமிந்தவுக்குபொதுமன்னிப்பு வழங்கப்பட்டது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

## ஜனாதிபதியின் முடிவுக்கு எதிராக 3 மனுக்கள்

ஆனால், கொலையுண்ட பாரத பிரேமசந்திரவின் மகளான ஹிருணிக்கா மௌனம் காக்கவில்லை. நீதிப் போராட்டத்தை தொடர்ந்தார். அவருக்கு பக்கபலமாக பலர் இருந்தனர். இதனால் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பின் சட்டபூர்வ தன்மையை அவர் சவாலுக்குட்படுத்தத் துணிந்தார். ஹிருணிகா பிரேமச்சந்திர, அவரது தாயார் சுமனா பிரேமச்சந்திர மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கஸாலி ஹூசைன் ஆகியோர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பைச் சவாலுக்கு உட்படுத்தி மூன்று அடிப்படை உரிமை மனுக்களை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். அவற்றை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம், பூர்வாங்க விசாரணையின் பின்னர் மனுதாரர்கள் தரப்பு வாதங்களை ஏற்று மே 31 ஆம் திகதி இந்த இடைக்காலத் தடை உத்தரவை வழங்கியது.

நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த மூன்று அடிப்படை உரிமை மனுக்களை விசாரிப்பதற்கு அனுமதி வழங்கி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. துமிந்த சில்வாவை கைது செய்யவும், வெளிநாடு செல்ல தடை விதித்தும் உத்தரவிடப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் துமிந்த சில்வா கைது செய்யப்பட்டு, மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

## மிருசுவில் படுகொலை!

துமிந்த சில்வா விவகாரத்தில் வழங்கப்பட்டுள்ள இந்த இடைக்கால தடை உத்தரவானது, மிருசுவில் படுகொலை வழக்கிலும் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு பொதுமன்னிப்பு வழங்கக்கூடிய அதிகாரம் இருந்தாலும், அந்த அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் எவருக்காவது, அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அவருக்கு நீதி நிவாரணத்தை வழங்கும் வகையிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு இப்படியான அதிகாரம் வழங்கப்பட்டது. இலங்கையில் அரசியல் தேவைகளுக்காகவே பெரும்பாலும் அந்த அதிகாரம் ஜனாதிபதிமாரால் பயன்படுத்தப்பட்டுள்ளமை கசப்பான உண்மையாகும்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், மிருசுவில் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவுக்கு கோட்டாபய ராஜபக்ச பொதுமன்னிப்பு வழங்கினார். அதன்பின்னரே துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்டது. இந்த இரு பொது மன்னிப்புகளும் சவாலுக்குட்படுத்தப்பட்டிருந்தாலும் துமிந்த விடயம் முதலில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, இடைக்கால தடை உத்தரவும் பிறக்கப்பட்டுள்ளது. இதனால் சுனில் ரத்னாயக்க விடயங்களிலும் 'நீதி' நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்று பிறந்துள்ளது.

## மிருசுவிலில் நடந்தது என்ன?

2000 டிசம்பர் 19 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் நான்கு சைக்கிள்களில் மிருசுவிலில் உள்ள தமது சொந்த நிலங்களை நோக்கிச் விறகுகளைச் சேகரிப்பதற்காக ஒன்பது பேர் சென்றுள்ளனர். இவ்வாறு சென்றவர்களில் எட்டு பேர், (தந்தை, ஐந்து மற்றும் 13 வயது இரண்டு பிள்ளைகள், பிறிதொரு தந்தை மற்றும் அவரது 13 வயது மகன், இரண்டு மைத்துனர்கள்) இராணுவத்தினரால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். அந்த கொலைச்சம்பவமே மிருசுவில் படுகொலையென விளிக்கப்படுகின்றது. ஞானச்சந்திரன், சாந்தன், ஞானபாலன் ரவிவீரன், செல்லமுத்து தெய்வகுலசிங்கம், வில்வராஜா பிரதீபன், சின்னையா வில்வராஜா, நடேசு ஜெயச்சந்திரன், மற்றும் வில்வராஜா பிரசாத் ஆகிய எட்டுப் பேரே இவ்வாறு கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர்.

விறகு தேட வந்திருந்த மகேஸ்வரன் என்பவர், இராணுவத்தின் பிடிக்குள் இருந்து தப்பியோடியுள்ளார். படையினரால் மகேஸ்வரனைக் குறிவைத்துச் சுடமுடியவில்லை. மகேஸ்வரனுக்கு அந்த இடம் மிகவும் பரிச்சயமானது. அதனால் அவர் குறுக்கு வழிகளைப் பயன்படுத்தி தனது சித்தி வீட்டுக்குத் தப்பிச் சென்றார். இவர் அரை நிர்வாணமாகவே அங்கு சென்றிருந்தார். அதனால் சித்தி வீட்டார் அச்சப்பட்டனர். இவர் முழு விடயத்தையும் அவர்களிடம் தெரிவித்து விட்டு காட்டுக்குள் அன்றிரவைக் கழித்தார்.

அவரது முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தச் சம்பவத்தில் ஐ.நா தலையிட்டது. இது தொடர்பில் மிகத் துரிதமான விசாரணை மேற்கொள்ளுமாறு இராணுவ உயர் கட்டளை அதிகாரி கட்டளையிட்டார். இச்சம்பவம் தொடர்பாக இராணுவ பொலிஸார் மகேஸ்வரனிடம் விசாரணை செய்தனர். ஆனால் இவர்கள் தொடர்பில் மகேஸ்வரன் அச்சப்பட்டார். இறுதியில் தமக்கு ஒத்துழைப்புத் தருமாறு அவர்கள் மகேஸ்வரனை நம்பிக்கை கொள்ளச் செய்தனர். சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு மகேஸ்வரன் அழைத்துச் செல்லப்பட்டார். மலசலகூடக் குழிக்கு அருகில் சென்றபோது அங்கே இரத்தக் கறைகள் இருப்பதை இராணுவப் பொலிஸார் அடையாளங் கண்டனர். மலசலகூடத்தின் குழிக்குள் அவர்களது உடலம் போடப்பட்டதாக மகேஸ்வரன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மலசலகூடக் குழி திறக்கப்பட்டது. ஆனால் அதற்குள் இறந்த ஆடு மட்டுமே இருந்தது. மகேஸ்வரன் தப்பிச்சென்றதை குற்றவாளிகள் அறிவர். அதனால் குற்றவாளிகள் தமது குற்றத்தை மறைப்பதற்காக கொலை செய்யப்பட்ட உடலங்களை அங்கிருந்து அகற்றிவிட்டனர். அதற்குப் பதிலாக இறந்த ஆடும் அதன் இரத்தமுமே அங்கே காணப்பட்டது. இக்கொலை வழக்கை விசாரணை செய்த இராணுவக் காவற்துறையினரின் தலைமை தொடர்ந்தும் முயற்சி செய்தது. இறுதியில் அந்த இடத்திலிருந்து இராணுவச் சீருடை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இந்தச் சீருடை கஜபா படைப்பிரிவின் சிறப்பு பிளட்டூனுக்குச் சொந்தமானதாகும்.

ஆகவே அவர்கள் இந்த பிளட்டூன் சிப்பாய்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். அண்மையில் ஆட்டை அடித்துக் கொன்றது யார் எனக் கேட்ட போது இதில் சம்பந்தப்பட்டது தானேதான் என குற்றவாளியான சுனில் ரத்நாயக்க ஒப்புக்கொண்டார். அதன்போது மகேஸ்வரன் உடனடியாகக் குற்றவாளியை இனங்கண்டு கொண்டார். இதன்பின்னர் குற்றவாளி கைது செய்யப்பட்டார். விசாரணையின் போது நடந்த விடயங்கள் அனைத்தையும் இராணுவக் காவற்துறையிடம் பிரதான குற்றவாளி ஒப்புவித்தார்.

இதன்பின்னர் பொதுமக்கள் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட இடத்தை இராணுவக் காவற்துறையினர் கண்டுபிடித்தனர். இந்த இடம் ஆரம்பத்தில் உடலங்கள் புதைக்கப்பட்ட மலக்குழியிலிருந்து 500 மீற்றர் தூரத்திலிருந்தது. படுகொலை செய்யப்பட்டு, நான்காவது நாள் உடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டன. இந்த வழக்குத் தொடர்பாக இராணுவத் தளபதிக்கு அறிக்கையிடப்பட்டது. இதன் பின்னர் இராணுவத் தளபதி இக்கொலை தொடர்பாக காவற்துறைக்கு அறிவித்தார்.

இறுதியில் பொதுமக்கள் எட்டுப்பேரும் ,ஐந்து இராணுவ வீரர்களால் படுகொலை செய்யப்பட்டதாக குற்றம்சுமத்தப்பட்டது. அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ட்ரயல் அட் பார் முறையில் நடந்த இந்த வழக்கில், 2015 ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் திகதி , இராணுவ இளநிலை அதிகாரியான சுனில் ரத்நாயக்க என்ற இராணுவ அதிகாரிக்கு மரணதண்டனை விதித்து, கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஏனைய நான்கு படையினரும் போதிய சாட்சிகளில்லை என விடுவிக்கப்பட்டனர். இந்த தீர்ப்புக்கு எதிராக, ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார்.

இந்த மனு முன்னாள் தலைமை நீதியரசர் நளின் பெரேரா, நீதியரசர்கள் புவனேக அலுவிகார, சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜெயவர்த்தன, முர்து பெர்னாண்டோ ஆகிய ஐந்து நீதியரசர்களைக் கொண்ட அமர்வினால் விசாரிக்கப்பட்டது. இதையடுத்து 2019 மே 20 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த வழக்கில் கொழும்பு மேல்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு சரியானதே என்று உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்களும் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் 2020 மார்ச் மாதம் சுனில் ரத்னாயக்கவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பொதுமன்னிப்பு வழங்கினார். ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு மனித உரிமைகள் அமைப்புகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டன. எனினும், தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதியால் அவர் விடுவிக்கப்பட்டார். சுனில் ரத்னாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை ஆட்சேபித்து முன்வைக்கப்பட்டுள்ள மனு எதிர்வரும் ஜுலை 06 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. மனுவை விசாரிப்பதா அல்லது தள்ளுபடி செய்வதா என்பது அன்று முடிவாகும்.

துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை ஆட்சேபித்து மனு தாக்கல் செய்த ஹிருணிக்காவின் சார்பில் சுமந்திரனே முன்னிலையானார். மிருசுவில் படுகொலை விவகாரத்திலும் சுனில் ரத்னாயக்கவுகசு வழங்கப்பட்ட பொது மன்னிப்பை ஆட்சேபித்து தாக்கல் செய்த மனுதாரர் சார்பில் சுமந்திரனே ஆஜராகின்றார். சிலவேளை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றத்தில் தீர்மானித்தால், பொதுமன்னிப்புக்கு இடைக்கால தடை விதிக்கப்படும். சுனில் ரத்னாயக்க மீண்டும் சிறைக்கு செல்ல நேரிடும்.

மனு நிராகரிக்கப்பட்டால், சுனில் ரத்னாயக்க சுதந்திரமாக நடமாடுவார். இவ்வாறு அவர் சட்டத்தின் பிடிக்குள் இருந்து தப்பினாலும் மனசாட்சி அவரை மெல்லக் கொல்லும். கர்மவினை சும்மா விடாது. அப்பாவி மக்களை கொன்று புதைத்துவிட்டு, நிம்மதியாக வாழ முடிகின்றதெனில் அவன் நிச்சயம் மனித உருவில் நடமாடும் மிருகமாகவே இருக்கக்கூடும்.

# தூரம் அதிகமில்லை!

## காலிமுகத்திடல் போராட்டம் - தமிழர் பங்கேற்பும் - தமிழர் உரிமைக்கான குரல்களும்




இலங்கையின் அரசியல் சூழலில் அண்மைய நாட்களில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திகொண்டிருக்கும் ஒரு போராட்டமாக, அறுபது நாட்களை அண்மித்துக்கொண்டிருக்கிறது, காலிமுகத்திடல் - கோட்டாகோகம ஆர்ப்பாட்டங்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகவேண்டும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும், ராஜபக்சக்களும் ஊழல் செய்த முன்னைய அமைச்சர்களும் பதவி விலகவேண்டும் என்ற அடிப்படைக் கோரிக்கைகளோடு அரசியல் நடைமுறை மாற்றம் என்ற போராட்ட இலக்கை முன்வைத்து இந்த முற்றுகைப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்தப் போராட்டம் உடனடி வெற்றியைக் கொண்டுவராது, நீண்ட காலம் எடுக்கும்.ஆனால் அதற்கும் தயாராகும் விதமாகவே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாக முதலிலேயே தெரிந்தது. நீடித்து நிலைக்கும் வகையில் உணர்ச்சிப் பெருக்கை மட்டும் அடிப்படையாக வைக்காமல், தமது நோக்கங்களை தெளிவாக முன்வைத்து ஆரம்பிக்கப்பட்டது இந்த காலிமுகத்திடல் போராட்டம்.

### தெற்குக்கு இது புதுசு

வடக்கிலும் கிழக்கிலும் காலாகாலமாக நடந்துவரும் பற்பல போராட்டங்கள் பற்றி சரியாக அறிவூட்டப்படாத சிங்கள மக்களுக்கு இப்படியானதொரு நீண்ட இருப்புப் போராட்டம் முதற்தடவையாக என்று புளகாங்கிதப்படுவதில் ஆச்சரியமில்லை தான். ஆனால் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் இப்போது 2000 நாட்களுக்கு மேலாக நடந்துகொண்டிருப்பதையும், அபகரிக்கப்பட்ட, சுவீகரிக்கப்பட்ட தம் நிலங்களுக்கான போராட்டத்தை மக்கள் ஆண்டுக்கணக்காக நடத்தி வருவதையும் வடக்கு கிழக்கின் உதாரணங்களாகவும், தமது அடிப்படை வேதன உயர்வுக்காகவும் தலைமுறை தலைமுறையாக உரிமைகள் மறுக்கப்பட்டு ஏமாற்றப்பட்டு வருவது பற்றியும் மலையக மக்கள் நடத்தி வரும் போராட்டங்கள் பற்றியும் கூட சிங்கள மக்களுக்கு - அவர்களது முதன்மை ஊடகங்கள் சரியாக வழங்காத செய்திகளையும் கொண்டு சேர்ப்பதற்கும்கூட இந்த காலிமுகத்திடல் போராட்டம் தான் உதவியிருக்கிறது என்பது காலத்தின் ஆச்சரியம்.

முற்றுகைப் போராட்டம் - காலிமுகத்திடலை கைப்பற்றி அங்கேயே தங்கியிருந்து அரசாங்கத்துக்கு எதிரான இந்தப் போராட்டம் புதிய முறையிலானது ஜனாதிபதி கோட்டாபய வீட்டுக்குச் செல்லவேண்டும் என்பதைப் பிரதானமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டதனால் 'கோட்டாகோகம' - கோட்டாவை வீட்டுக்கு அனுப்பும் கிராமம் - அதன் பின் இதனை அடியொற்றி பல்வேறு கிராமங்கள் - மைனாகோகம, ஹொருகோகம - திருடர்களை விரட்டுவோம் (நாடாளுமன்றத்தின் முன்பாக), நோடீல் கம - பிரதமர் ரணிலுக்கு எதிராக - உருவாக்கப்பட்டன.

இந்தக் காலத் தலைமுறை தங்கள் கோரிக்கைகளை கொண்டு சேர்க்கும் நவீன வழிமுறைகள் கொண்டது. அத்தோடு இந்தக் காலகட்ட மக்களது நியாயங்களை அடிப்படையாகக் கொண்டது.

ஆரம்பத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சரிவும் மக்களது வாழ்வாதாரத்தில் அது ஏற்படுத்திய மாபெரும் தாக்கமும் வீதிக்கு இறக்கியதாக இருந்தாலும் தனியே சோற்றுக்கும் எரிவாயுவுக்குமான போராட்டமாக சித்தரிக்கப்பட்டதனை ஒருமுகப்படுத்தி அரசியல் மாற்றத்துக்கானதாக மாற்றியதில் புதிய தலைமுறையினரின் பங்கு மிக முக்கியமானது.

மகாவம்ச மன நிலை என்று தமிழரால் குறிப்பிடப்படும் இனத்துவேஷ , பேரினவாத நிலைப்பாட்டில் இருந்து மாற்றம் பெறும் புதிய தலைமுறை ஒன்றினால் முன்னெடுக்கப்படும் போராட்டம் ஒன்றில் ஆரம்பத்தில் தமிழர் இணைவது - தமிழ் பேசும் சமூகமாக முஸ்லிம்கள் இணைந்துகொண்டாலும் - குறைவாக, தயக்கத்துடன், சந்தேகத்துடன், சில இடங்களில் முற்றாக இல்லாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது.

அதற்கான காரணங்களும் ஏற்கக்கூடியவை் நியாயமானவை. காலாகாலமாக பேரினவாதத்தாலும் பிரச்சினைகளை புரிந்துகொள்ள முடியா பெரும்பான்மை சமூகத்தாலும் ஏமாற்றங்களையே சந்தித்து வந்த தமிழ்ச் சமூகத்துக்கு உடனடியாக இப்படியான போராட்டம் பற்றிய நம்பிக்கையீனமே அதிகமாக இருந்ததில் தவறில்லை.

ஆட்சி மாற்றம்,அரசியலில் ஏற்படவுள்ள மாற்றம் என்றும் 69 லட்சம் மக்களின் வாக்குகளோடு கொண்டுவரப் பட்ட அரசாங்கம் என்பதனால் "நாம் தான் வாக்களிக்கவில் லையே, அப்போதே நாம் நிராகரித்த ஒருவரை அகற்றுவதில் நாம் ஏன் சேர வேண்டும்?" என்ற கேள்விகளும் தொனித்தன.

எனினும் எங்கெங்கு சந்தர்ப்பங்கள் வாய்க்கினும் அவை அத்தனையையும் கையகப்படுத்தி எமக்கான வென்றெடுக்கப்பட வேண்டிய உரிமைகள் பற்றி வலியுறுத்தவும் அவற்றை முறையாகக் கொண்டுசேர்க்கவும் காலிமுகத்திடலில் ஏற்பட்ட சிறு அதிர்வு மாற்றத்தைப் பயன்படுத்தலாம் என்று நினைத்தவர்கள் மாற்றங்களை உருவாக்க முயன்று ஓரளவு வெற்றியும் கண்டிருப்பது முக்கியமானது.

அறுதிப் பெரும்பான்மை வழங்கி, 2/3 பெரும்பான்மை யுடன் ஆட்சி பீடம் வழங்கியவர்கள் பொருளாதாரச் சுரண்டலுடன், தமது உரிமைகளும் நசுக்கப்பட்ட பின் நடத்தும் போராட்டம் என்பதால் ஒரு கை தட்டிய ஓசை பலனற்றது் மற்ற சமூகங்களையும் இணைத்துக்கொள்ளவேண்டும் - அப்படியெனில் மட்டுமே இந்தப் போராட்டம் வலிமையையும் பெறும், இலக்கும் அடையப்படும் என்ற உண்மை புரிந்தது அவர்களுக்கு.

அதேபோல முன்பிருந்தே புரிந்து,இணங்கி நடந்தோரை விட புதியதான மனமாற்றத்தை அடைந்தோர் கொழும்புக்கு வெளியே நடந்த அடக்குமுறைகள் மற்றும் அக்கிரமங்களை தமக்கு நடப்பனவற்றை வைத்துக்கொண்டே உணரமுடிந்தது உண்மையில் ஒரு முக்கியமான முன்னேற்றமாக அமைந்தது.

இத்தனை காலம் பெரியளவில் நிகழாத - மக்களுக்கிடையிலான உரையாடல் - வெளிப்படையிலான உண்மையின் தரிசனம் ஏற்பட்ட இடம் அது தான்.




A.R.V.லோஷன்

இறுக்கமான, அதிகாரத்தின் உச்சபட்ச இரும்புப் பிடியைப் பயன்படுத்திய இந்த கோட்டாபய அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழும் பயத்தை இல்லாமல் ஆக்கியதும், உரிமைகளுக்காக குரல்கொடுத்தால் சட்டமும் பின்னால் நிற்கும் என்ற நம்பிக்கையை, கொழும்பைத் தாண்டி வெளியேயும் இதுவே நீதியானதாகவும் இருக்கும் என்றும் உணர்த்திய முதல் சந்தர்ப்பம் காலிமுகத்திடலாலேயே ஏற்பட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சிலகாலம் முன்பு வரை அறியப்படாத, ஒரு பெயருக்கான அமைப்பாக மட்டுமே இருந்துவந்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் அரசாங்கத்தை உலுக்கும் அளவுக்கு மாறியதும் கோட்டாகோகம ஆரம்பித்த பின்பு தான்.

தமிழில் பாடப்பட்ட தேசிய கீதம் - அது பாடியதில் பிக்கு ஒருவரது சர்ச்சை - பின் மன்னிப்புடன் கூடிய மீண்டும் அனைவராலும் ஒன்றுபட்டுப் பாடப்பட்ட தேசியகீதம், அரசாங்க ஒட்டுப்படைகளால், அரசாங்க பயங்கரவாதத்தால் நிகழ்த்தப்பட்ட ஊடகவியலாளர் மீதான அடக்குமுறைகளில் பாதிக்கப்பட்ட, இல்லாமல் ஆக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளரின் நினைவுகூரல், இராணுவத்தால் கொடூரமாக சிதைக்கப்பட்டு கொல்லப்பட்ட இசைப்பிரியாவை நினைவுகூர்ந்த ஊர்வலமும் சிங்கள ஊடகவியலாளரின் அரசாங்கத்துக்கு எதிரான கண்டனமும், காலிமுகத்திடலில் முதன்முறையாக முள்ளிவாய்க்கால் இறுதி மோதலில் கொன்றழிக்கப்பட்ட மக்களின்நினைவேந்தல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டங்கள், யாழ்ப்பாண நூலகத்தின் எரிப்பின் நினைவுகூரல் என்று இதுவரை காலமும் பெரும்பான்மை மக்கள் மத்தியில் சாத்தியமே படாது என்று நினைத்த விடயங்கள் காலிமுகத்திடலில் - அதுவும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் நடந்தேறின.

இவை மட்டுமே மாற்றத்துக்கான நம்பிக்கை என்று கருதமுடியாவிடினும் - இனவாதம் - பேரினவாதம் கண்ணை மறைத்திருந்த ஒரு சமூகத்தின் கண்களைக் கொஞ்சமாவது திறக்கச் செய்து அதனூடாக சமத்துவம், இணக்கம் மற்றும் திறந்த உரையாடலுக்கான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் முதல் படி இது தான்.

காலாகாலமாக இலங்கையில் அரசியல்வாதிகளால், முக்கியமாக சிங்கள அரசியல்வாதிகளால் ஊட்டி வளர்க்கப்பட்ட துவேஷத்தையும் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் மீதான இனவெறுப்பையும் தவறான புரிதல்களையும் ஒரேயடியாக அத்தனை விரைவாக மாற்றமுடியாது. அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒவ்வொரு அடியும் முக்கியமானது.

போரினாலும், இனவொடுக்கலினாலும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட இனமானதால் இன்னமும் இறங்கிப்போவதில் தமிழினம் இணங்காது. இணங்குவதும் நியாயமானது இல்லை. ஆனால் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் நீண்ட காலமாக சீழ்பிடித்துப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கான எம் பக்க நியாயங்களை எடுத்துக்கூறுவதில் தயங்கவும் கூடாது.அவ்வாறான சந்தர்ப்பங்களை அவதான மாகப் பயன்படுத்தவும் வேண்டும்.

எம் அடிப்படை நியாயங்களை எடுத்துச் சொல்வதன் மூலம் அவர்களை இணங்கச் செய்வதும், இரண்டு தரப்புக்களுக்கும் இடையிலான இணக்கமான புள்ளிகள் மூலமாக, காலிமுகத்திடல் போராட்டக்காரர் அரசாங்கத்துக்கு வழங்கியுள்ள - காலிமுகத்திடலுக்கு அப்பால் என்ற 8 அம்சக் கோரிக்கைகளின் விரிவுபடுத்தப்பட்ட விடயத்தில் எங்கள் கோரிக்கைகளும் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ச விலகியது, அமைச்சரவையில் முன்னர் குற்றம் சுமத்தப்பட்ட பலர் இல்லாதிருப்பதும், 20ஆம் சட்டத்திருத்தம் அகற்றப்பட்டு 19ஆம் சட்டத்திருத்தத்தின் அம்சங்களை உள்ளடக்கி 21ஆம் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுவதே இந்த முற்றுகை இருப்புப் போராட்டத்தின் கவனிக்கக்கூடிய சில வெற்றிகள் தான்.

எனினும் தமிழர் தரப்பை முற்றாக இணைக்காது அவர்களால் இந்தப் போராட்டத்தின் அர்த்தமுள்ள வெற்றியைச் சுவைக்க முடியாது. சர்வதேச ரீதியிலும் இந்தப் போராட்டத்தின் அடிநாதங்களில் ஒன்றாக விளங்கும் - 74 வருட தவறான அரசியல் கலாசாரத்தை மாற்ற - system change என்பதை நிகழ்த்த முடியாது.

இதனால் தான் 60க்கு மேற்பட்ட அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களால் இணைந்து மேற்கொள்ளப்படும் கோட்டாகோகம போராட்டம் இத்தனை காலமும் பெரும்பான்மையான சிங்களவரால் 'ஏற்றுக்கொள்ள முடியாதனவாக' கருதப்பட்ட சில நியாயமான இதயங்களை ஏற்றுக்கொண்டு அவற்றுக்காகவும் குரல்கொடுக்க ஆரம்பித்துள்ளது.

நாட்டின் பல்வகைமையை ஏற்றுக்கொண்டு, உரிமைகளுக் கான குரல்கொடுப்பை நியாயமான முன்னெடுப்பாகவும், அனைவருக்குமான அடிப்படை உரிமைகளை உறுதிப் படுத்துவதையும் முழுவதுமாக ஏற்றுக்கொண்டால் மட்டுமே தமிழரின் பங்கேற்பு உணர்வுபூர்வமானதாக இருக்கும் என்பது உறுதி.

அதேநேரம் தமிழர் தரப்பு உணர்ந்துகொள்ளவேண்டியது ஆட்சிமாற்றம், பொருளாதாரச் சிக்கல், அரசியல் உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் நசுக்கப்படுவதும் ஜனநாயகம் முடக்கப்பட்டு, எதிர்காலம் பற்றிய ஐயம் நிலவுவதும் தனியே சிங்களவருக்கோ தெற்குக்கோ மட்டுமானதல்ல என்பதை.

தமிழர்களின் பிரச்சினையை தெற்கிலுள்ள மக்களுக்கு கொண்டுசேர்க்க போராட்டத்தில் பங்கெடுப்பது பற்றியும் அந்தப் பங்கேற்றலின் மூலம் சிறிய மாற்றங்களையேனும் ஏற்படுத்துவதன் மூலம் இத்தனை காலம் இருந்த தடைகளைக் களையக்கூடியதாக இருப்பின் அது மிகப்பெரிய ஒரு வரலாற்று முன்னெடுப்பாக இருக்கும்.

இப்படியான போராட்டங்களைப் பார்த்து தமது அடுத்தகட்ட அரசியல் முன்னெடுப்புக்களை அவதானமாக முன்னெடுக்கும் அரசியல் கட்சிகளும் நாடாளுமன்ற அரசியலில் பிரதிபலிக்கப்படும் இந்தப் போராட்ட உணர்வுகளும் ஜனநாயக முன்னெடுப்புக்களுக்கும் உரிமைகளை வென்றெடுக்கக் குரல் எழுப்பப்படுவதற்கும் முக்கியமானவை.

அதை நாம் உணர்ந்து எமது அடிஎடுப்புக்களை தீர்மானிக்கவேண்டியது காலத்தின் தேவை.



# தமிழகத் தம்பியும்

# அப்போ அதெல்லாம் உண்மையில்லையா?

**த.த.** : என்ன அண்ணே ,உங்க ஊர்ல பயங்கர பஞ்சமாமே!? சாப்பாடு எல்லாம் இல்லாம ஜனங்க ரோட்டில செத்து விழுறாங்களாம்...

**ஈ.அ.** : அடக்கடவுளே, அப்ப நீயும் அந்த யூரியூப் வீடியோக்களை பார்த்திட்டியா?

**த.த** : ஆமாண்ணே ,ஒண்ணில்ல ரண்டில்ல .ஒரு பத்தொம்போது வீடியோ இருக்கும்.. ஒண்ணு பார்க்க ஒண்ணு வந்திகிட்டே இருக்கு! “ இலங்கையில் பட்டினியா ?” “ ஒரு கிலோ மாவுக்காக இலங்கையில் நடந்த கொலை” “ பெற்றோல் வரிசைக்கு காத்திருந்து பெற்றோல் ஊற்றி இளைஞன் தற்கொலை முயற்சி” இப்பிடி போகுதண்ணே.

**ஈ.அ** : ’டேவிட் பில்லா ஸ்டைலில் ஒரு லட்சம் அகதிகள் இலங்கையில இருந்து தமிழ்நாட்டுக்கு’ எண்ட வீடியோவை விட்டிட்டாயடா தம்பி..

**த.த** : என்னண்ணே கிண்டல் பண்ணிறாப்ல இருக்கு? அப்ப இதுல்லாம் உண்மை கெடையாதா?

**ஈ .அ** : எடேய் தம்பி, உந்த யூரியூப் டொலரில காசு குடுக்கிறதால, இப்ப இதில மற்ற ஆட்களை விட கனபேரைக் கிளிக் பண்ண வைக்க வேண்டுமென்றதுக்காக எங்களுக்கு முதல்ல தெரியிற அந்த வீடியோ படத்தை இல்லாத பொல்லாத எல்லாம் சொல்லி உசுப்பேத்திவிடுறாங்கள், அதுதான் உண்மை.

**த.த** : அட.. என்னண்ணே இது.. நானும் என் அண்ணன் பொண்ணும் பார்த்திட்டிருந்தோம்.. அது ரொம்ப ஆப்செட் ஆகி “ சித்தப்பா நான் டாய்ஸ் வாங்க வச்சிருந்த 50 டாலரை எடுத்துக்கோங்க.. இதை எப்பிடியாச்சும் ஈழத்துக்கு குடுத்து விட்றுங்கன்னு சொல்லிடுச்சுண்ணே..

**ஈ.அ** : இந்த வீடியோக்களால அந்த நன்மை ஒண்டு இருக்கு தான். ஸ்டாலினும் தமிழக அரசும் இதுகளைப் பார்த்தினமோ தெரியாது..

ஆனா அவை செய்த உதவிகள் எண்டைக்கும் இலங்கை தமிழ் மக்களை தமிழக சொந்தங்களைப் பற்றி நினைக்க வைக்கும்.

**த.த** : ரொம்ப சந்தோசமா இருக்குண்ணே..நம்மாளுங்க மொத்த இலங்கைக்கும் தானே உதவி செஞ்சாங்க.. அப்புறம் என்ன தமிழ் மக்கள் மட்டும் நினைப்பாங்க எண்றீங்க?

**ஈ.அ** : அங்க தான் இலங்கை அரசியல் ட்விஸ்ட் இருக்குது..

**த.த** : என்னாண்ணே பஞ்சத்தில அடிபட்டாலும் அரசியல் வஞ்சகத்தனம் இருக்கும் போலயே?

**ஈ.அ** : காலம் காலமாக ஆதிக்கம் செலுத்திற சிங்கள பேரினவாதம் இந்த தமிழக இந்திய உதவிகளை ஏற்றுக் கொள்ள ஜீரணிக்க முடியாம ஒண்டு மறைக்கப் பார்க்குது இல்லாட்டி வேற கதை கட்டி சுத்திவிடுது.

**த.த** : அதெப்படிண்ணே?

**ஈ.அ** : தமிழக அரசு தந்த உதவிகளை சில ஊடகங்களும் அரசியல்வாதி, அதிகாரிகளும் அப்பிடியே மறைச்சு இந்தியா தான் உதவி செய்தது எண்டு பிளேட்டை மாத்தப் பாக்கினம்... இன்னும் தீவிரமான சிலபேர் இந்தியாவே ஒண்டும் செய்யேல்ல எண்டு அப்பிடியே மறைக்கப் பார்க்கினம்.

**த.த** : அட அவ்வளவு தமிழாளுங்க மேலயும் இந்தியா மேலயும் வன்மமா?

**ஈ.அ** : தம்பி டேய்.. என்ன தான் இவங்கள் உருட்டு உருட்டினாலும் இண்டைக்கு இலங்கை ஓடாட்டியும் கொஞ்சமாவது உருண்டு கொண்டு போய்க்கொண்டிருக்கிறது இந்தியாவாலயும் தமிழ்நாட்டாலயும் தான்



# ஈழத்து அண்ணாவும்

பெடியனும் கடியனும்

# ஆஸ்திரேலிய அரசியலமைப்புச் சட்டம்

## (Australia constitutional law)

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்.**
இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயின்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்

இந்தக் கட்டுரையில் ஆஸ்திரேலிய அரசியலமைப்புச் சட்டம் பற்றி விளக்கமாக ஆராய உள்ளேன். முதலில் அரசியலமைப்பு சட்டம் என்றால் என்ன? எனக் குறிப்பிடுவோம்.

அரசியலமைப்புச் சட்டம் என்பது ஒரு நாட்டின் சட்டமுறைமையும் (Legal System) அரச முறைமையும் (Governmental system) பற்றிய நெறிமுறைகளாகும்.

ஒரு நாட்டின் அனைத்துச் சட்டங்களுக்கும் அத்திபாரமாக விளங்குவது (Foundation) அரசியலமைப்புச் சட்டம் ஆகும்.

எனவே ஆஸ்திரேலியாவில் எவ்வாறு சட்டம் , அரசு இயங்குகின்றது என அறிய வேண்டுமாயின் அரசியலமைப்புச் சட்டம் பற்றிய அறிவு அத்தியாவசியமானதாகும்.

ஆஸ்திரேலிய அரரசியலமைப்பு ஒரு எழுதப்பட்டதும் (Written) அதிகாரப் பகிர்வும் (Federal) உடைய அரசியலமைப்பு ஆகும்.

இவ்விடத்தில் அதிகாரப் பகிர்வுக்கும் (Federal) அதிகாரப் பரவலாக்கலுக்கும் (Devolution of Power) இடையே உள்ள வித்தியாசங்களைக் குறிப்பிட்டுச் செல்ல விரும்புகின்றேன்.

சமஷ்டி அரசு (Federal) என்பது மத்திய அரசும் மாநில அரசும் சட்டவாக்கலில் அதிகாரங்களைப் (Legislative Power) பகிர்ந்து கொள்வதாகும்.

ஆனால் அதிகாரப் பரவலாக்கல் (Devolution of Power) என்பது உயர்ந்த அதிகார அமைப்பிலிருந்து (Higher Power Authority) குறைந்த அதிகார அமைப்புக்கு (Lower Power Authority) அதிகாரம் செல்வது ஆகும். எனவே இவையிரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசம் முக்கியமானது ஆகும்.

அடுத்து ஆஸ்திரேலிய அரசியல் அமைப்புச் சட்டம் பற்றி நோக்கமுன் ஆஸ்திரேலிய அரசியல் வரலாறு (Political History) பற்றி சில விடயங்களைக் குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தம் என நினைக்கிறேன்.

*1901*ஆம் ஆண்டுக்கு முன் ஆஸ்திரேலிய ஒரு நாடாக இருந்ததில்லை. மாறாக இங்கிலாந்தினால் நேரடியாக ஆட்சி செய்யப்பட்ட பல்வேறு காலனிகளாகவே (Colony) இருந்தது.

ஒருங்கிணைக்கப்பட்ட ஆஸ்திரேலிய (Commonweatte of Authority) அரசியலமைப்பு ஆனது ஐக்கிய இராச்சிய (United Kingdom) பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டது. (Commonweatte of Authority Constitution Act 1900)

இந்தச் சட்டம் *1901*ஆம் ஆண்டு ஆஸ்திரேலியக் கூட்டமைப்பினை (Anterian Federation) உருவாக்கியது.

இந்தச் சட்டமானது ஆஸ்திரேலிய மக்களின் ஒன்றிணைய வேண்டும் என்ற அபிலாஷைகளையும் ஆஸ்திரேலிய மக்களுக்கும் அரசுக்கும் இடையேயான உறவு முறைகளையும் வெவ்வேறு அரசு துறைகளுக்கிடையேயான (Branches) உறவுமுறை பற்றியதுமான அடிப்படைச் சட்டம் ஆகும். இந்த அரசமைப்பு ஆஸ்திரேலியாவின் அடிப்படைச் சட்டம் ஆகும்.

ஆஸ்திரேலிய அரசியலமைப்புச் சட்ட அறிவு என்பது தனியே எழுதப்பட்ட அரசியலமைப்பை ஆராய்வது மட்டுமல்ல. மாநில, மத்திய அரச ஸ்தாபனங்களின் உறவு-முறை பற்றியதும் ஆகும். எழுத்து வடிவத்தில் உள்ள ஆஸ்திரேலிய அரசியலமைப்பு மாநில, மத்திய, உறவுமுறை, அவற்றின் செயற்பாடு பற்றி பெரும்பாலான விடயங்களை குறிப்பிட்டுச் சொல்கின்றபோதும் சில விடயங்கள் மரபு மூலம் பின்பற்றப்படுவன ஆகும்.

பொதுமக்களின் அதிகாரம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்? என்பன அரசியலமைப்பும் அரசியலமைப்புச் சட்டமும் குறிப்பிடுவதுடன் அந்த அதிகாரங்களுக்கு உள்ள மட்டுப்பாடுகளையும் குறிப்பிடுகின்றன.

ஒரு கூட்டம் அரசியலமைப்புடன் முரண்படுமாயின் அந்தச்சட்டம் ஆஸ்திரேலிய உச்ச நீதிமன்றில் (Anthony High Court) வலுவற்றது என பிரகடனப் படுத்தப்படும்.

அரசாங்கங்கள் (State and central Govets) நாடாளுமன்றங்கள் (State and central Parliament) அரசியலமைப்புக்கு இயைபாகச் செயற்பட வேண்டும். அவ்வாறு இயைபாகச் செயற்படாவிடின் உச்சநீதிமன்றம் (High Court) முரண்பாடான செயற்பாடுகளை வலுவற்றதாக்கும்.

ஆஸ்திரேலிய அரசியல் அமைப்பு , பிரித்தானிய அரசியலமைப்புச் சட்டம், மரபுகள் என்பவற்றையும் ஐக்கிய அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்ட முறைமையையும் உள்வாங்கி எழுதப்பட்ட அரசியலமைப்பு ஆகும்.

இப்பொழுது ஆஸ்திரேலிய அரசியலமைப்பினை உருவாக்கிய ஐக்கிய இராச்சிய (United Kingdom) சட்டமாக The Commonwealth of Authority Constitution Act *1900* இனை சிறிது ஆராய்வோம்.

இந்தச் சட்டம் ஒன்பது பிரிவு-களை மட்டுமே கொண்ட ஒரு சட்டம் ஆகும். இதில் ஒன்பதாவது பிரிவு ஆஸ்திரேலிய அரசியலமைப்பு ஆகும்.இந்த அரசியலமைப்பு எட்டு அத்தியாயங்களைக் கொண்டதாகும்.

முதல் மூன்று அத்தியாயங்களும் மத்திய அரசின் சட்டவாக்கதுறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவற்றின் விதிகளை எடுத்து உரைக்கின்றன. ஏனையவை வர்த்தகம், நிதி மற்றும் மாநில பிராந்தியம் என்பவற்றின் விதிகளையும் அரசியலமைப்பின் மாற்றியமைக்கும் விதிகளையும் எடுத்துரைக்கின்றன.

ஆஸ்திரேலிய அரசியலமைப்பை ஆராய்ந்து பார்த்தால் அதனை வரைந்தவர்கள் (Draften) வலுவேறாக்கம் (Separation of powers) என்ற அரசியலமைப்பு தத்துவத்தினை மனதில் கொண்டோ வரைந்துள்ளார்கள் என்பது வெளிப்படை .

**(தொடரும்)**

# எங்களில் இருந்தே தொடங்கப்பட வேண்டும், மாற்றம்!



**இலங்கையின் பொருளாதார நெருக்கடி மிகப் பெரிய அனர்த்தங்களை உண்டாக்கக் கூடிய அபாய நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலையைக் குறித்து இன்னும் அரசாங்கமோ, அரசியல் தலைவர்களோ ,அங்குள்ள புத்திஜீவிகளோ மற்றும் மக்கள் அமைப்புகளோ தீவிரமாக உணர்ந்ததாக எந்த அடையாளங்களையும் காணவில்லை என்று துயரமடைகிறார் இரேனியல் செல்வின் மரியாம்பிள்ளை. இலங்கையின் மிகச் சிறந்த – திறன்வாய்ந்த நிர்வாக அதிகாரியென பலராலும் குறிப்பிடப்படும் செல்வின், போர் நெருக்கடிச் சூழலில் இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் பணியாற்றியவர். பின்னர் ரணில் – பிரபா உடன்படிக்கையின் போது உருவாக்கப்பட்ட வடக்குக் கிழக்குக்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான செயலகத்துக்குப் பொறுப்பான பணிப்பாளராக நியமிக்கப்பட்டு, துரித பணிகளை மேற்கொண்டவர். நான்காம் கட்ட யுத்தத்தின்போது (இறுதி யுத்தம்) நாட்டை விட்டு வெளியேறி நோர்வேயில் சில ஆண்டுகள் இருந்தார். பின் மீண்டும் இலங்கைக்குத் திரும்பி சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகளில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறார். எப்பொழுதும் சாத்தியமான நடைமுறைகளைப் பற்றியே பேசியும் செயற்பட்டும் வரும் செல்வினை "எதிரொலி"க்காகச் சந்தித்தோம்.**

**நேர்கண்டவர்: அதிசயன்**

**கேள்வி: புதிய அரசாங்கத்தின்மீதும் மக்கள் நம்பிக்கையிழக்கும் நிலைதானே இருக்கின்றது? ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைப்பொறுப்பேற்ற பிறகும் பொருளாதார நெருக்கடி தொடர்கிறதே?**

**செல்வின்:** தங்களது கேள்வி பல தவறான கற்பிதங்களைக் கொண்டுள்ளது. ஒன்று இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடி என்பது ஒருவரின் தலைமைத்துவ மாற்றத்தினால் செய்யக்கூடியது என்ற தவறான கணிப்பீடு. இரண்டாவது ரணில் விக்கிரமசிங்க தான் இந்தப்பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கக்கூடிய மந்திரச்சாவியை வைத்திருக்கின்றார், எனவே அவர் வந்தால் பிரச்சினைகள் எல்லாம் 'பகலவனைக் கண்ட பனி போல' விலகி ஓடிவிடும் என்ற அதீத மதிப்பீடு. மூன்றாவது ரணில் விக்கிரமசிங்கவிடம் தற்போது நாட்டின் ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்று நீங்கள் நம்ப முயற்சிப்பது. அது மிகவும் அபத்தமானது.

முன்பு பஸில் ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக வந்தவுடன் நாடு விரைந்த வளர்ச்சியைப்பெறும். ஏனெனில் பஸில் ராஜபக்சவுக்கு "ஏழு மூளைகள் இருக்கின்றன" என்று அவரது சகாக்கள் பேசிக்கொண்டதாக பத்திரிகைகள் பதிவு செய்திருந்தன. இப்படி அளவுக்கு மீறிய கற்பனைகளினாலும் எதிர்பார்ப்புகளினாலும் ஏமாந்து போகுமளவுக்கு இலங்கையின் பெரும்பாலான மக்கள் அதிமேதாவிகளாக்கப்பட்டிருக்கின்றனர் என்பது மிகவும் கவலைக்குரியது.

அத்தகைய மக்கள் இத்தகைய அரசுகளிலும் தனிமனிதர்களின் அதிமானிடத்தன்மையிலும் கொள்ளும் நம்பிக்கை பொய்த்துப்போகும் போது அவர்கள் நம்பிக்கையிழப்பதனை நாம் பரிதாபத்துடன்தான் கடந்துசெல்லவேண்டும்.

ஏனெனில் அதுவரை எந்தவொரு அதிகாரத்திலுள்ள தரப்பும், அரசியல் தலைவர்களும் இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளின் முழுமையான பரிமாணத்தை மக்களுக்கு வெளிப்படையாகக் கூறவில்லை. அதற்கு அவர்களது புரிதல்களின் மட்டுப்பாடுகளும் உண்மையினைப் பேசும் திராணியற்ற நிலைமையும் காரணமாக உள்ளது.

**கேள்வி: ஆனால் ரணில் அரசுக்கு ராஜபக்சக்களைவிட திறனும் வெளி ஆதரவும் உள்ளது என்று எதிர்பார்க்கப்பட்டதே?**

**செல்வின்:** மீண்டும் அதே தவறான கோணத்தில் தான் உங்கள் கேள்வி அமைந்துள்ளதாக நான் உணர்கின்றேன். ஏனெனில் தனது கட்சி சார்பாக தேர்தலில் எந்தவொரு தொகுதி ரீதியான (மாவட்ட ரீதியான) பிரதிநிதித்துவத்தையும் பெறமுடியாமல், தீவு அடங்கலாகப் பெற்ற ஒட்டுமொத்த வாக்குகளின் அடிப்படையில் கட்சிக்கு கிடைத்த வெகுமதி ஆசனத்துக்கு ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டு நாடாளுமன்றத்துக்குள் வந்துள்ளார். அவ்வாறு வந்ததும் கட்சிக்குள் நடந்த உள்ளகப்போட்டிகள், முரண்பாடுகள் ஆகியவற்றைத்தாண்டித்தான். எனவே அவரது தற்போதைய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பெருமைமிகுந்தது என்று என்னால் கூறமுடியாது.

அடுத்தது ,அவரிடம் இப்போது ஆட்சியதிகாரத்தின் தலைமை கையளிக்கப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு விடயத்தை ஆழமாக நோக்குபவர்கள் 'இல்லை' என்றே பதில் கூறுவர். அவர் இப்போது ஒரு நெருக்கடிகால திட்டமுகாமையாளராக வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார் என்றே கூறமுடியும். அவருக்கு மேலே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ச உள்ளார். அவருக்கு கீழே நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையினை தனது கைவிரல் நுனிகளினால் ஆட்டுவிக்கும் பஸில் ராஜபக்ச உள்ளார். எனவே ரணிலிடம் உண்மையில் அதிகாரம் இல்லை. அப்படியென்றால் ஆட்சியும் இல்லை என்றுதானே அர்த்தம்.

இலங்கையின் மத்திய வங்கிக்கு தற்போது ஆளுநராகவுள்ள, ஆஸ்திரேலியாவிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ள கலாநிதி நந்தலால் வீரசிங்க ஒரு துறைசார்ந்த நிபுணர். அவர் கூறுகின்றார், 'தான் எதிர்பார்க்கும் விடயங்களை அரசாங்கம் நிறைவுசெய்யாவிடின், தனது பொறுப்புக்களிலிருந்து மறுபடியும் ஆஸ்திரேலியா சென்று விடுவேன் 'என்று. அதே போல்தான் ரணில் விக்கிரமசிங்கவும் கூறுகின்றார் 'என்னால் முடியாவிட்டால் விலகிச்சென்றுவிடுவேன்' என்று. இங்கு வீரசிங்கவின் கூற்றுக்கும் விக்கிரமசிங்கவின் கூற்றுக்கும் இடையில் எந்தவொரு வேறுபாட்டினையும் காணமுடியவில்லையே.

'தன்னால் முடியாவிட்டால் தப்பித்து ஓடிவிடுவேன்' என்று கூறுபவன் எப்படித் தலைவனாக இருக்கமுடியும்? ரணில் விக்கிரமசிங்கவுக்கு சில திறமைகள் இருக்கலாம். மேற்குலகின் இராஜதந்திரிகளுடன் உறவாடி காரியங்களைச் சாதிக்கும் சாமுத்திரிகா லட்சணங்கள் அவருக்கு உண்டு என்று நம்பியவர்கள், தங்களது நிகழ்ச்சித்திட்டத்துக்குள் அவரை உள்வாங்கியுள்ளனர் என்றே உணரமுடிகின்றது. அவரது செயலாற்றலுக்கும் கவர்ச்சிக்கும் ஒரு எல்லை உண்டு. அத்துடன் அவரது அரசியல்வாழ்வில் அவர் சாதித்த சாதனைகளின் பட்டியல் இன்னமும் முழுமையாக அறியப்படவில்லை.

எனவேதான் ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின் பின்னான விளைவுகள் பற்றி யாராலும் திருப்தியடைந்து கொள்ளமுடியவில்லை. மேற்குலகும், நட்புநாடுகளும் கூட ரணில் விக்கிரமசிங்கவின் பாத்திரம் பற்றியும் அதன் வலுபற்றியும் அவரால் எத்தனை காலத்துக்கு இந்தப்பதவியில் நீடிக்க முடியும் என்பது பற்றியும் சந்தேகம் கொண்டுள்ளன. அதனால்தான் தொடர்ச்சியான நிபந்தனைகளை விதித்து, காலத்தை நீட்டி ,அதற்குள் அரசியலமைப்பு மாற்றம் மற்றும் அதிகாரக்கட்டமைப்பு மாற்றம் ஆகியவற்றை உருவாக்க எத்தனிப்பதனை அவதானிக்க முடிகின்றது. அவர்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய நிலைமை தோன்றும் வரை 'இலவுகாத்த கிளியாக காத்திருப்பது' இலங்கை மக்களின் தலைவிதியாக மாறியுள்ளது. இதனை ரணில் விக்கிரமசிங்கவும் நன்றாகப் புரிந்திருக்கின்றார் என்றே தோன்றுகின்றது.

**கேள்வி: பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்கள் ஏதுமுண்டா? புதிய ஏற்பாடாக என்னவெல்லாம் செய்யமுடியும்?**

**செல்வின்:** தங்களது கேள்வி முழு இலங்கையினையும் கருத்திற்கொண்டதாக அமைந்துள்ளதா அல்லது தமிழர் தாயகமான வடக்கு கிழக்கினை மையமாக கொண்டுள்ளதா என அறிய முடியவில்லை.

முழு இலங்கைக்குமான பார்வையாகக் கூறுவதானால் பத்திரிகைகளில், அறிக்கைகள் ஊடாக உணவு உற்பத்தி பெருகுகின்றது! நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய அரசியல் தலைவர்களும் ,தலைநகரத்திலேயே மிகவும் கடுமையான வேலைப்பளுவுக்குள் சிக்குப்பட்டுள்ளனர்!! எனவே அவர்களால் தங்கள் தொகுதி மக்களுடன் நேரடியாக பேசி உணவு உற்பத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் உள்ளது!!! எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அவர்களால் தங்கள் தொகுதிகளுக்கு திரும்பிச்செல்ல முடியவில்லை!!!! அரசாங்கமும் செலவு தவிர்ப்பு, வளங்களின் வீண் விரயம் பற்றி கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது.

அரசாங்க அலுவலர்களின் வேலைநாட்கள் எரி பொருள் நெருக்கடி காரணமாக வாரத்தில் ஐந்திலிருந்து மூன்று நாட்களாக குறைக்கப்பட்டது. தற்போது வெள்ளிக்கிழமையும் விடுமுறைநாளாக அறிவிக்கப் பட்டுள்ளது. போக்குவரத்துக்கான எரிபொருளை மீதப் படுத்துவதற்காக ஒருநாளினை வேலைக்கு வரத்தேவையில்லாத நாளாக அறிவித்த அரசாங்கம் வேலைக்கு வரும் நாட்களில் ஏனைய நாட்களுக்கான பணிச்சுமையினையும் நிறைவு செய்யவேண்டும் என்ற கடப்பாட்டினை அலுவலர்களுக்கு நினைவூட்டத் தவறியுள்ளது. முடிவாக செய்யப்படாத வேலைகளின் பட்டியல் எதிர்காலத்தில் மிக நீண்டும் அவற்றை செய்வதற்கான மேலதிக வேலைக்கொடுப்பனவுக் கோரிக்கை மிகப்பெரிய அளவாகவும் மாறும் அபாயமும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் 'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம்' என்ற மனோநிலை இங்கு வளர்ந்து கொண்டு செல்கின்றது. இந்தியா தரும், சீனா தரும், அமெரிக்கா தரும், ஐ.நா தரும் என்ற எதிர்பார்ப்புப் பட்டியல் விரிவடைந்து செல்கின்றது.

மறுபக்கத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் முன்நிபந்தனைகள் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றத்திற்கு வந்துள்ளன. அந்நியசெலாவணி மிதக்கவிடப்பட்டுள்ளது. ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. வரிகள் யாவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. தனியார்துறையின் கைகளுக்கு அத்தியாவசியமான உரம் போன்றவற்றின் இறக்குமதிகள் கூட கையளிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத் துறையினரின் செலவுகளைக்குறைக்கும் சுற்றறிக்கைகள் கடுமையாக அமுலுக்கு வந்துள்ளன. அரசாங்க உத்தியோகத்தர்கள் இரண்டு தொடக்கம் ஐந்து வருட சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போகலாம் என அரசு அறிவித்துள்ளது. பலநாடுகளுக்கும் வேலையாட்களாக சென்று 'திரை கடலோடித் திரவியம் சேர்க்கும்படி' அரசு இளைய தலைமுறையினரை அரசு கேட்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்றமுறையில் தொழிற்றுறைக் கல்வியை மாற்றியமைக்கும்படி துறைசார் அமைச்சர் கல்விநிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் 'நூலிலே ஆடும் பொம்மையாக' இலங்கைத்தீவு மாறிக்கொண்டிருக்கின்றது. 'ஆமை புகுந்த வீடும் அமீனா (நீதிமன்ற உத்தரவுப்படி சொத்துக்களை பறித்து ஏலம் விடுபவர்) புகுந்த வீடும் விளங்காது' என்பது தமிழகத்தின் முதுமொழி. அந்தக்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லைப்போலும்.

இன்று இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடி ஐந்து முதன்மையான பிரச்சினைகளால் வெளிப்பட்டுள்ளது.

1. கடந்த காலத்தில் சர்வதேசத்திடமிருந்து பெற்ற பாரியளவிலான கடன்களின் வருடாந்த மீள்செலுத்துகைகளைச் கொடுப்பதற்கு வேண்டிய அந்நிய செலாவணிக் கையிருப்பு இந்நாட்டின் திறைசேரியிலோ, மத்தியவங்கியிடமோ கையிருப்பில் இல்லை. அதனால் கடனைச் செலுத்தமுடியாத கையறுநிலையினை அடைந்த நாடாக இலங்கை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்தக் கறுப்புப் பட்டியலில் இருந்து இந்நாட்டினை மீட்பதற்கு கடனை மீள்செலுத்துவதற்கான நிதியாக அந்நிய செலாவணி தேவைப்படுகின்றது. அதற்காக இலங்கை சர்வதேச நாணயநிதியத்தை நாடியுள்ளது.

2. நாட்டுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களான எரிபொருள், சமையல் எரிவாயு, மருந்துப்பொருட்கள், உணவுப்பொருட்கள் மற்றும் கைத்தொழிற்றுறைக்கு தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பெருமளவு அந்நிய செலாவணி தேவையாகவுள்ளது. அது இலங்கையின் கையிருப்பில் இல்லை. இதனால் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் வாழ்வியல் நெருக்கடி.

3. அந்நிய செலாவணி நெருக்கடியின் மூர்க்கத்தைக் குறைப்பதற்காக அரசாங்கம் விவேகமற்ற முறையில் அறிமுகப்படுத்திய இறக்குமதிக் கட்டுப்பாடுகளில் ஒன்றாக விவசாயத்துக்கு மிகவும் அத்தியாவசியமான இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள், பீடைகொல்லிகள் மீதான தடை- காரணமாக விவசாயத்துறை முழுமையான முடக்கத்துக்குள் சிக்குப்பட்டது. இது உள்நாட்டு விவசாயத்தின் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை நேரடியாக ஏற்படுத்தியபடியினால் ஏற்பட்ட உணவுப்பொருட்களுக்கான நெருக்கடி.

4. சர்வதேச அரங்கில் நடைபெறும் யுத்தங்கள் மற்றும் நிழல் யுத்தங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக உலகம் தழுவிய தாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகள். குறிப்பாக எரிபொருட்கள் மற்றும் உணவுப்பொருட்களின் மட்டுப்பாடும் அவற்றுக்கான சர்வதேச சந்தையின் விலை உயர்வுகளும். இதன்காரணமாக இலங்கையின் நாணயப்பெறுமதி வீழ்ச்சியடைந்ததுடன் பொருட்களுக்கான விலைகளும் பலமடங்காக அதிகரித்து சாதாரண மக்களின் கொள்வனவுச் சக்தியை மிகவும் பலவீனமாக்கிய நிலைமை.

5. இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நிலைமைகளை வெற்றிகரமாகக் கையாளக்கூடிய திறமையும் நேர்மையும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட ஒரு அரசியல் தலைமையோ, அரசாங்கமோ இலங்கையில் கட்டியெழுப்பப்படாமை. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள மிகப்பெரும் வெற்றிடமும் அரசியலின் உறுதியற்ற நிலைமையும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# எங்களில் இருந்தே தொடங்கப்பட வேண்டும், மாற்றம்!

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஐந்து பிரச்சினைகளை விட மேலதிகமாக ஆறாவது பிரச்சினையும் தற்போது கூர்மையடைந்து வருகின்றது.

அதுதான், தற்போது சர்வதேச நாணய நிதியத்தை அபாயரட்சகனாக அணுகியபோது, அந்நிறுவனம் விதித்துள்ள முன்நிபந்தனைகளை நிறைவேற்றும் போது ,அது நேரடியாக உள்ளூர் மக்களின் வாழ்வியலிலும் வாழ்வாதாரத்திலும் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள். இதனால் தூண்டப்படப்போகும் பாரிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காரணமாக நாட்டில் உருவாகப்போகும் வர்க்க முரண்பாடுகளும் தற்காத்துக்கொள்வதற்கான போராட்டங்களும்.

உங்கள் கேள்வியை தமிழர் தாயகமான வடக்கு கிழக்கினை மையப்படுத்தி நோக்குவோமாக இருந்தால், நாங்கள் மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் இவ்விடயத்தைக் கையாளவேண்டும். யுத்தத்தையொட்டிய காலங்களில் வடக்கு, கிழக்கு மக்கள் மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடியையும் உணவு நெருக்கடியையும் எதிர்கொண்ட அனுபவத்தையும் படிப்பினைகளையும் கொண்டவர்கள். அந்தக்காலத்தில் அத்தகைய மிகப்பாரிய மனிதநேய நெருக்கடியை அரச அலுவலர்கள் தொடக்கம் சமூகக்குழுக்கள் உட்பட அரசசார்பற்ற அமைப்புகள் என அனைவரையும் ஒருங்கிணைத்து மக்களுக்காக திட்டங்களை முன்னெடுப்பதற்கு மிகவும் அர்ப்பணிப்பும் தீட்சண்யம் கொண்டதுமான ஒரு தலைமை தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பினால் வழங்கப்பட்டது. தற்போது அத்தகைய தலைமைத்துவ ஆற்றல்கள் எமது மக்கள் மத்தியில் இல்லை. ஆனாலும் கடந்தகால அனுபவங்களும் படிப்பினைகளும் தந்த முன்மாதிரிகளை அறிந்த தலைமுறையினர் இன்றும் எம்மத்தியில் வாழ்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மக்களாலும் மலையகத் தமிழர்களாலும் நான் முன்குறிப்பிட்ட ஆறுபிரச்சினைகளையும் பிராந்திய ரீதியாக எதிர்கொள்வது சாத்தியமற்றது. அவற்றில் நேரடியாக மக்களின் வாழ்வியலையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் விடயங்களில் தங்கள் பிராந்தியங்களுக்குள் மக்களினதும் உள்ளூர் நிறுவனங்களினதும் பங்களிப்புடன் செய்யக்கூடிய விடயங்களை அவர்கள் செய்யவேண்டும். அதுவே அவர்கள் தங்கள் பிராந்திய மக்களை ஓரளவுக்காவது நெருக்கடியின் கோரத்திலிருந்து மீட்பதற்கான வழியாக அமைய முடியும்.

அத்தகைய முயற்சிகள் பலதளங்களில் ஒன்றாக இணைந்து திட்டமிட்டு முன்னெடுக்கப்படவேண்டும். ஆர்வமும் சமூகப்பொறுப்பும் உணர்ந்த தனிமனிதர்களும் சமூகக்குழுக்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் தங்கள் இயலளவுக்கு ஏற்றவகையில் தங்கள் பணிகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றன. இவற்றில் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் பெறுமதி மிக்க பங்களிப்பும் அக்கறையும் கூட வரையறுக்கப்பட்ட அளவில் பின்புலமாகவும் பலமாகவும் அமைந்துள்ளது என்பதனை இவ்விடத்தில் நான் பகிர்ந்துகொள்ளத்தான் வேண்டும்.

ஆனாலும் முன்னெடுப்புகள் அளவில் சிறியவைகளாகவும் அதிர்வுகள் குறைந்தவையாகவும் உள்ளன என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

**கேள்வி: இந்தப்பிரச்சினைக்கு எவ்வளவு காலத்தில், எப்படித் தீர்வுகாணமுடியும்?**

**செல்வின்:** இலங்கைத்தீவு தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினை ஒரு எதிர்பாராத இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்டிருந்தால் அந்த இழப்புகளை சீர்செய்து மீண்டெழுவதற்கான காலத்தை துல்லியமாகச் சொல்லமுடியும்.

ஆனால் இது 1940 களின் பின் அரைப்பகுதியில் சுதேசிகளின் கைகளில் தீவின் ஆட்சியதிகாரம் ஒப்படைக்கப்பட்ட காலத்திலிருந்து முன்னெடுக்கப்பட்ட திட்டமிட்ட செயற்பாடுகளின் ஒட்டுமொத்த தவறுகளின் திரட்சியேயாகும். பெரும்பான்மை இனமேலாதிக்க சித்தாந்தவாதிகளின் பிடியில் சிக்கிய தேசத்தையும், அதன் தலைவர்களையும் மீட்டெடுக்க தவறிய குடிமக்களின் பொறுப்பற்ற தன்மை காரணமாகவே ஊழலும் பாராபட்சமும் அபிவிருத்தியில் சமனிலையற்ற முதலீட்டுப்பாய்ச்சல்களும் இந்த தீவின் இருப்பினையே கேள்விக்குறியாக்கியுள்ளன.

எனவே இதனை ஒற்றைப்புள்ளியிலிருந்து தொடங்கும் எந்தவொரு முயற்சிகளாலும் மீட்டெடுத்துவிடமுடியாது. மிகவும் நிதானமாகவும் துல்லியமாகவும் தவறுகளையும் அதற்கான மூலகாரணங்களையும் கண்டறிந்து அவற்றைச் சீர்செய்யவேண்டியுள்ளது. அவ்வாறு செய்வதற்கு முதலில் இந்த நாட்டின் அரசியல்வாதிகளுக்கும் தலைவர்களுக்கும் ‘அரசியல் விருப்பு’ இருக்கவேண்டும். மக்களிடம் உண்மையினை வெளிப்படைத்தன்மையுடன் பேசும் நேர்மை அவர்களுக்கு இருக்கவேண்டும். தங்களது கடந்தகால தவறுகளை ஒத்துக்கொண்டு சீர்செய்வதற்காக கூட்டாக உழைப்பதற்கான உறுதியிருக்கவேண்டும். நாட்டின் வளங்களை கபளீகரம் செய்யாமல் முழுமையாக அர்ப்பணித்து , விளைவுகளை நேர்மையாக அறுவடை செய்து மக்களுக்கு அர்ப்பணிப்போம் என்ற சத்தியத்தை அவர்கள் அனைவரும் மேற்கொள்ளவேண்டும். அரசாங்க பொதுத்துறை ஊழியர்கள் அனைவரும் முழுமையான பொறுப்புக்கூறல் கடப்பாட்டுடன் நேர்மையாக பணியாற்றுவதற்கு முன்வரவேண்டும்.

இவ்வாறு எல்லாம் நிகழ்ந்து ஒரு தெளிவான நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் நாங்கள் செயற்படுவோமாக இருந்தால் அடுத்த ஒரு தசாப்தத்துக்குள் நாங்கள் மீண்டெழுவோம் என நம்பலாம். இல்லையேல் இந்தத் தலைமுறை அந்தப்பொற்காலத்தைக் காணும் வாய்ப்பினை பெறப்போவதில்லை என்பதே இலங்கைத் தீவின் யதார்த்தமாக உள்ளது.

**கேள்வி: தற்போதைய ரணில் - கோத்தா அரசாங்கத்தினால் அது இயலுமா?**

**செல்வின்:** நீங்கள் மீளவும் மணல்கயிறு திரிக்க முற்படுகின்றீர்கள். முன்பு அரசாங்கத்தை வைத்திருந்த ரணில் ஆட்சியில் தான் இலங்கையின் மிகப்பெரிய மத்தியவங்கி பிணைமுறி மோசடி நடைபெற்றதாக பத்திரிகைகள் பதிவுசெய்துள்ளன. எனவே இன்றைய கையறு நிலைக்கு அவரும் தான் பொறுப்பு. பின்பு எப்படி அது சாத்தியமாகும்?

**கேள்வி: இதிலே அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் பொறுப்பு என்ன?**

**செல்வின்:** விட்டுக்கொடுப்பும் ஒன்றுபடுதலும் முக்கியமானது. அதற்காக அலிபாவும் நாற்பது திருடர்களுமாக ஒன்றுசேரக்கூடாது. அடுத்தது ,கடந்த காலத் தவறுகளை இனவாதக் கண்ணாடிகளை தூர வீசியெறிந்துவிட்டு மீளாய்வு செய்ய முன்வரவேண்டும். தவறுகளின் மூலகாரணம் இனவாத மேலாதிக்கத்தின் அடித்தளத்திலிருந்து வேர்விட்டதாக அறியும் போது அதனை முழுமையாக சீர்செய்யும் அரசியல் விருப்பு கட்டியெழுப்பப்படவேண்டும்.

சிங்கப்பூரின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் சாதனைகளுக்கும் பின்னாலிருந்த அந்த தேசத்தின் சிற்பி லீ க்வான் ஜூ அவர்களின் வரலாற்றின் மாதிரியிலிருந்து தங்களை மீளுருவாக்கத்திற்கு உட்படுத்த தயாராகவேண்டும். பெரும்பான்மை சீனர்களையும் மலேயர்களையும் இந்தியர்களையும் ஏனைய இனத்தவர்களையும் சமமாக அங்கீகரித்து ஒருங்கிணைத்து சிங்கப்பூரினைக் கட்டியெழுப்பிய பாதையில் பயணிக்க முன்வரவேண்டும்.

**கேள்வி: மக்களின் பொறுப்பு என்ன? அவர்கள் இந்தச் சூழலில் எப்படிச்செயற்படவேண்டும்?**

**செல்வின்:** பொதுவாக மக்கள் என்னும் போது சாதாரண பொதுமக்களைத்தான் நாங்கள் கருதுகின்றோம். ஆனால் இவ்விடத்தில் மக்கள் என்பதனை நாம் பல அடையாளங்கள் ஊடாக வகைப்படுத்தி நோக்கவேண்டும். முதலில் மக்கள் மத்தியில் உள்ள அறிவார்ந்த மக்களை புத்திஜீவிகளை, சிந்தனையாளர்களை நாம் கவனத்திற்கொள்ளவேண்டும். அவர்களது மௌனமும் கையாலாகாத்தனமும் நடுநிலைமை என்ற பெயரால் அவர்கள் சூடிய கபட வேடங்களும் தான் இன்று மக்களை அரசியல்வாதிகளின் பணயக்கைதிகளாகவும் அவர்களால் பலிபீடத்திற்கு அனுப்பப்படும் பலிக்கடாக்களாகவும் மாற்றியுள்ளது. இந்தக் குழாம் தனது மௌனத்தைக் களைய வேண்டும்.கூலி அடிமைத்தளையிலிருந்தும் ,நிறுவன விசுவாசத்தின் பொய்மையிலிருந்தும் தம்மை விடுவித்து மக்களிடம் உண்மை பேசவேண்டும். மக்களுக்கு வழிகாட்டவேண்டும். மக்களை தர்க்கரீதியாக சிந்திக்கத் தூண்டவேண்டும். மக்களை ஒன்றுதிரட்டி அவர்களை சமூகமாக வலுப்படுத்தும் உன்னத முயற்சிக்குத் தங்களை அர்ப்பணிக்கவேண்டும்.

அடுத்து சமூக அமைப்புக்கள் மற்றும் குழுக்கள். இவர்கள் தங்களுக்கு நிதியளிக்கும் அல்லது அதிகாரமளிக்கும் மறைகரங்களுக்கும் முறைசார் கட்டளையிடும் பீடங்களுக்கும் தங்களுடைய வினையாற்றலைக்காட்டும் சமகாலத்தில் தாங்கள் சார்ந்த சமூகத்திற்கு முழுமையான விசுவாசமுடையவர்களாகவும் அந்தச் சமூகங்களின் மீளெழுச்சிக்கும் மேலெழுச்சிக்கும் நிலைபேறான இருப்புக்கும் நீடித்த அமைதிக்கும் அரசியல் அங்கீகாரத்திற்கும் உழைப்பவர்களாக இருக்கவேண்டும். சமூகங்களை தங்கள் நிறுவனங்களின் அடையாளங்களால் கூறுபோடாமல் அவர்களை ஒருங்கிணைத்து மக்கள் எதிர்கொள்கின்ற மனிதநேய மற்றும் வாழ்வியல் நெருக்கடிகளை அவர்கள் வெற்றிகொள்வதற்கான தந்திரோபாய வழிகாட்டல்களையும் வள ஒதுக்கீடுகளையும் வழங்கவேண்டும்.

இறுதியாக நேரடியாக சாதாரண பொதுமக்கள் என்ற வகையினரை நோக்கும் போது அவர்களது கடப்பாடு மிகவும் பெரியது. தங்களையும் தங்களது குடும்பங்களையும் மட்டுமல்லாது சமூகம் ,இனம் ,பிராந்தியம் ,நாடு என்ற பரந்த தளத்தினைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். இன்றைய நெருக்கடிக்கு தங்களது தவறான தெரிவுகளும் குறைபாடான புரிதல்களும் விவேகமற்ற தீர்மானங்களும் குறுகிய குழுநிலைவாதங்களும் எவ்வாறு பங்களித்தன என்பதனை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அதேவேளையில் தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை எவ்வாறு தனியாகவும், கூட்டாகவும் எதிர்கொள்ளலாம் என்பதற்கான மூலோபாயங்களைக் கண்டறிந்து அவற்றை முன்னெடுக்கவேண்டும். உணவுப் பற்றாக்குறை நெருக்கடிக்கு நட்பு நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் தரும் நன்கொடை உணவுப்பொதிகளினால் நிரந்தரமாக தீர்வுகாணமுடியாது என்ற உண்மையினைப் புரிந்துகொள்ள முன்வரவேண்டும். இந்த உதவிகளினால் கட்டியெழுப்பப்படும் உணவுப்பாதுகாப்பு பொறிமுறை எங்களை உணவு தரும் சக்திகளின் பணயக்கைதிகளாக மாற்றிவிடும் அபாயத்தை முன்னுணர்ந்து தங்களது மக்களுக்கான உணவு இறைமையினை தாங்களே கட்டியெழுப்ப முன்வரவேண்டும். உணவு இறைமை என்பதில் மக்களே முதன்மையானவர்கள். அவர்கள் தங்களுக்கான உணவினை உற்பத்தி செய்வதனையும் அதனை களஞ்சியப்படுத்துவதனையும் பதனிடுவதனையும் விலையிடுவதனையும் சந்தைப்படுத்துவதையும் பங்கிடுவதனையும் முழுமையாக தங்களது கட்டுப்பாட்டிற்குள்ளேயே வைத்திருக்கும் நிலைமையைக் குறிக்கும். அத்தகைய நிலையில் அந்நிய நாடுகளாலோ, பல்தேசியக் கம்பனிகளினாலோ, தரகு முதலாளித்துவ சக்திகளினாலோ அல்லது ஆதிக்கமேலாண்மை கொண்ட அரசியல் சக்திகளாலோ அந்த மக்களைப் பட்டினி போட்டு பணியவைக்கமுடியாது.

எனவே மக்கள் தங்களால் சாத்தியமான சகல வழிமுறைகளையும் பின்பற்றித் தங்களது உணவு இறைமையினைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். அது வீட்டுத்தோட்டமாக இருக்கலாம், விவசாயப் பண்ணைகளாக இருக்கலாம், சிறு விவசாய முயற்சிகளாக இருக்கலாம். ஏன் மாடித் தோட்டங்களாகவும் பூச்சட்டிகளில் உருவாக்கப்படும் உபஉணவுப்பயிர்களாகக் கூட இருக்கலாம். தங்கள் மண்ணுக்கும் மரபுக்கும் வாழ்வுக்கும் ஏற்ற உள்ளூர் உணவுவகைகளுடாக தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்குமான போசாக்கு நிறைந்த உணவுச் சமனிலையினை உருவாக்கவேண்டும். உணவுகளை உலகமயமாக்கி இன்று கோதுமை மாவுக்கும், பொதியிடப்பட்ட பால்மாவுக்கும் தகரத்திலிடப்பட்ட மீன்களுக்கும் எங்களை அடிமையாக்கியுள்ள உணவுக் கலாசாரத்திலிருந்து நாம் விடுபடவேண்டும்.

அதேபோன்று இன்று எங்களது உணவு தயாரிப்பதற்கான சுதந்திரத்தை பல்தேசியக் கம்பனிகளிடம் பறிகொடுத்துள்ளோம். அவர்கள் சமையல் எரிவாயு தராவிட்டால் எங்கள் குழந்தைகள் சமைக்காத உணவினைத்தான் சாப்பிடவேண்டிவரும். நாங்கள் எந்த அடுப்பில், எந்தப் பாத்திரத்தில் சமைக்கவேண்டும் என்பதனைக்கூட எங்களுக்கானசமையல்எரிவாயுத்தரகர்களேதீர்மானிக்கின்றார்கள். எங்களுக்கான சமையல் எரிபொருளுக்கான செலவு என்பது அவர்களது லாபவேட்கையின் நியமங்களாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. இதிலிருந்து விடுபடுவது எவ்வாறு என்பதனை பொதுமக்கள் கண்டறியவேண்டும். மாற்று எரிபொருள் மூலங்களை சூழலுக்கும் சுகாதாரத்துக்கும் ஊறுவிளைவிக்காத வகையில் பயன்படுத்துவதற்கு தங்களைத் தயார்படுத்தவேண்டும்.

சமூகப்பொறுப்புள்ள தனியார் துறையினரும் பொதுநிறுவனங்களும் உணவு உற்பத்திக்கு வேண்டிய விதைகள், நாற்றுக்கள், இயற்கை உரங்கள் மற்றும் வேறு விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்தும் சேகரித்தும் மக்களுக்கு நியாயமான விலையில் தேவைப்படும் வேளையில் வழங்குவதற்கான நிறுவனங்களாக தங்களை உருவாக்கவேண்டும். விளைபொருட்களைப் பாதுகாப்பதற்கும், விரயங்களைக் குறைப்பதற்கும் சந்தைப்படுத்தி விவசாயிகளதும் நுகர்வோர்களதும் நிலைபேறான தன்மையினை பாதுகாப்பதற்கான வலையமைப்பு பொறியைக் கட்டியெழுப்பவேண்டும்.

இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்காக காத்திருந்து களைத்துப்போகாமல் பாரம்பரிய மருத்துவம் மற்றும் பாட்டி வைத்தியம், மூலிகைகளின் பயன்பாடுகள் ஆகியவற்றினை மீளவும் நாங்கள் எங்கள் வீட்டுத்தோட்டங்கள் ஊடாக வளர்த்தெடுக்கவேண்டும். அறிவுத்துறையின் மூலம் அதை நவீனப்படுத்த வேண்டும்.

‘பசிவந்தால் பத்தும் பறந்துபோம்’ என்று கூறிக்கொண்டு சமூகத்தை சீரழிக்கப் புறப்படும் சக்திகளிடமிருந்து சமூகத்தையும் நலிவுக்குள்ளானோரையும் விளிம்புநிலை மக்களையும் சமூக அமைதியையும் பாதுகாக்கும் பொறுப்பு சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் உரியது. அனைவரும் இணைந்து அதனைப் பொறுப்பெடுக்கவேண்டும். குற்றம் நிகழ்ந்தபின்பு தான் காவல்துறையும் நீதித்துறையும் நிர்வாகத்துறையும் விழிப்படையும். ஆனால் சமூகம் விழிப்படைந்திருந்தால் குற்றங்கள் நிகழும் சாத்தியங்களை மக்களால் கட்டுப்படுத்த முடியும்.

**கேள்வி: பொருளாதார நிபுணர்கள், துறைசார் செயற்பாட்டாளர்கள்,புத்திஜீவிகள், ஊடகங்கள் இந்தச் சூழலில் எத்தகைய பங்களிப்பைச் செய்யவேண்டும்? இவர்களுடைய பங்களிப்பை யார் ஒருங்கிணைப்பது?**

**செல்வின்:** இந்த வினாவுக்கான பதிலை ஏற்கனவே கூறிவிட்டேன். ஆனால் எங்களது முதன்மையான கேள்வி யாதெனில் ‘ பூனைக்கு மணிகட்டுவது யார்?’ என்பதுதான். இயல்பாகவே எங்கள் மத்தியில் ஒரு பழக்கம் உண்டு.

அது எதனிலும் ‘நதி மூலம் ரிசி மூலம் தேடுவது’. நதியின் மூலம் எது ரிசியின் மூலம் எது என்று தேடுவதும், மலிவாக தியாகிப்பட்டமும் துரோகிப்பட்டமும் வழங்குவதும் நலிந்து போன எங்கள் தலைமுறையின் மலிந்துபோன செயற்பாடாக மாறியுள்ளது. இந்த நோயிலிருந்து நாம் விடுபட்டு ஒன்றாக இணைந்து பணியாற்ற முன்வரவேண்டும். இவ்விடயங்களை பொதுவெளியின் பேசுபொருளாக்கும் போது அது விரைவில் சாத்தியமாகும்.

**கேள்வி: நாட்டின் உற்பத்தி துறையை, அதற்கான அனைத்துதரப்பின் பங்களிப்பை எப்படி மேம்படுத்தலாம்?**

**செல்வின்:** நீங்கள் மிகவும் சிக்கலான கேள்வியைக் கேட்கின்றீர்கள். தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி, போக்குவரவு நெருக்கடி, பொருட்கள் பற்றாக்குறை ஆகியவற்றினால் மக்கள் எதிர்கொண்டுள்ள வாழ்வியல் அழுத்தங்களைக் குறைத்து அரசுக்கு எதிராக அவர்களின் நெற்றிக்கண் தீ திரும்புவதனைத் தவிர்ப்பதற்காக விடுமுறைகள் அறிவிக்கப்படுகின்றன. வேலைநாட்கள்

(22ஆம் பக்கம் பார்க்க)



# ஆஸ்திரேலியாவின் தொழில் நகரம் ‘நியூகாஸில்’

**நெ செ பரத்**

“மன்னிக்க வேண்டுகிறேன்” என்ற பாடல் வரியோடு தொடங்கலாம் என்று எண்ணுகிறேன். இந்த மன்னிப்பு சென்ற மாத இதழில் என் கட்டுரை இடம் பெறாததற்காக. அது சரி, சரிவில் இருந்து மீண்டு எழு(து)வதிலும் ஒரு சுவாரசியம் இருக்கத்தான் செய்கிறது.

இந்த மாதம் எந்த இடத்தை பற்றி எழுதலாம் என்று சிந்தித்துக் கொண்டு இருந்த வேளையில் மின்னல் வெட்டென நம் மனதில் தோன்றிய இடம் தான் 'நியூகாஸில்'. இயற்கை வளமும், நவீன வாழ்வியலும், வரலாறும் கை கோர்க்கும் இடம் தான் இந்த கடற்கரை நகரமான நியூகாஸில். சிட்னிக்கு வடகிழக்கே சுமார் 160 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இந்த நியூகாஸிலுக்கு ரயிலிலேயே செல்லலாம். சுமார் 3 மணி நேரம் பிடிக்கும் இந்த பயணத்தை பற்றி எழுத பேனா, மை ,பேப்பரை சந்தித்த வேளையில் என் எண்ண ஓட்டங்களும் நியூகாஸிலை நோக்கி பயணித்தன.

அது ஒரு அதிகாலைப் பொழுது.

கோடை காலம் என்பதால் கதிரவன் சற்று விரைவாகவே வெளிச்சத்துடன் வந்துவிட, நாங்கள் சிட்னி சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து நியூகாஸில் செல்லும் ரயிலில் ஏறி அமர்ந்தோம். ரயிலின் ஜன்னல் வழியே அங்கிருந்த மக்களையும், சென்ட்ரல் நிலையத்தின் உட்கட்டமைப்பையும் ரசித்து கொண்டு இருந்தோம். நமக்கு ஏனோ இந்த இடம் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தை நினைவுபடுத்தியது, பெயர்ப் பலகைகள் கூட சென்னையில் இருப்பது போலவே இருப்பது ஆச்சரியம் தான். அப்போது நண்பர் சொன்னார், 'இரண்டையும் நிறுவியது ஆங்கிலேயர்கள் தானே, அதனால் தான் இரண்டும் ஒரே மாதிரி உள்ளது' . உண்மை தான், நமக்கு கூட ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில், எங்கேயாவது கடைகளில் தமிழ்ப் பெயர்ப்பலகையை பார்த்துவிட்டாலோ , அல்லது எதிரொலி போன்ற தமிழ்ச் செய்தித் தாளை பார்த்தாலோ ஒரு இனம் புரியாத களிப்பு வருகிறதுதானே !

இதற்கிடையில் ரயில் மெதுவாக நகர்ந்து சில நொடிகளில் வேகமடைந்தது. இந்த வெளியூர்களுக்கு செல்லும் (Regional Services) ரயில்களின் உட்புறம் ஒரு நீண்ட பயணத்துக்கான அடிப்படை வசதிகளோடு தான் உள்ளது. அகண்ட இருக்கைகள், பயணமூடைகள் வைக்க மேலே ஒரு அடுக்கு, கழிவறை வசதி என எல்லாம் சிறப்பாக இருந்தன.

ஏறத்தாழ 45 நிமிடங்களில் நகர எல்லையை தாண்டியது நம் ரயில், வானளாவிய அடுக்கு மாடி கட்டடங்கள் மறைந்து, விஸ்தாரமான நிலப்பரப்பில் வீடுகள், அதை சுற்றி மரங்கள், சாலைகளில் வெகு சொற்பமான வாகனங்கள் என புத்துணர்ச்சி புது வெள்ளமாக காட்சிகள் அமைந்தன. அன்றாட வாழ்க்கையில் எப்போதும் எத்தனையோ நோக்கி ஓடி கொண்டு இருக்கும் நமக்கு, எதுவுமே செய்யாமல் ஜன்னல் வழியே வேடிக்கை பார்ப்பது என்பது முதல் சில நிமிடங்களில் சவாலைத் தந்தாலும், மெல்ல மெல்ல மனம் தன் தளர்வு (Relaxation) நிலைக்கு திரும்பியது. நண்பர்களோடு உரையாடிக்கொண்டும், வறுத்த நிலக்கடலையை கொறித்துக்கொண்டும் அருமையாக சென்று கொண்டு இருந்தது நம் நியூகாஸில் பயணம். அது வரை மனதை ஆட்கொண்டு இருந்த அலுவலக அரசியல், வீட்டுப்பிரச்சினைகள் என எல்லாக் கவலைகளும் (தற்காலிகமாக) விடை பெற்றன.


நியூகாஸில் பயணத்தின் மற்றுமொரு சிறப்பு, மகிழுந்து இல்லாமல் பெரும்பாலான இடங்களை நியூகாஸிலில் நாம் சென்றடைய முடியும் என்பது தான். அரசு பேருந்துகள், “லைட்-ரயில்” எனப்படும் டிராம் மாதிரியான ரோட்டிலியே தண்டவாளம் மீது மிதவேகத்தில் ஓடும் ரயில்கள் நியூகாஸிலின் எல்லா இடங்களுக்கும் சென்று வர ஏதுவாக இருக்குமாம்.

மரங்கள், மலைகள், நீர்நிலைகள் என அடுத்த 2 மணி நேரம் தொடர்ந்து பயணித்த எங்கள் ரயில் “நியூகாஸில் இன்டர்சேஞ்” எனப்படும் ரயில் நிலையம் வந்து அடைந்தது. “புதிய வானம், புதிய பூமி” என அன்பே வா எம். ஜி . ஆர் .பாணியில் துள்ளி குதித்து ரயிலில் இருந்து இறங்கினோம். இதுதான் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் அதிகமான எண்ணிக்கையில் மக்கள் வாழும் பகுதிகளில், இதற்குத்தான் இரண்டாம் இடம். சிட்னியில் இருந்து இவ்வளவு தொலைவில் இருக்கும் இந்த நகரம் தொழில், பொருளாதாரம், வாழ்க்கை தரம் என எல்லாவற்றிலும் எப்படி இவ்வளவு முன்னேறியுள்ளது என்னும் கேள்வி நம் மனதில் விஞ்சி நின்றது.

வெறும் சுற்றுலாத் தலமாக மட்டுமன்றி, ஒரு தொழில் நகரமாகவும் இது எப்படி விளங்குகிறது என்பதை அறிய







வரலாற்றைப் புரட்டினோம். 1797-இல் சிட்னியில் இருந்து புறப்பட்ட “கம்பர்லேண்ட்” என்னும் கப்பல் அன்றைய தண்டனைக் கைதிகளால் கடத்திச்செல்லப்படவே, அதை மீட்கும் பணியை ஏற்று நடத்திய ஜான் ஷார்ட்லண்ட் என்ற ஆங்கிலேய அதிகாரி, இந்தப் பகுதியை முதன்முதலில் கண்டறிந்தார் என வரலாறு சொல்கிறது. ஆனால் இன்னும் தொன்மையான வரலாறு நமக்கு சொல்லும் உண்மை என்னவென்றால், சுமார் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த நிலப்பரப்பின் பாதுகாவலர்களாக இருந்தவர்கள் “அவக்கல்” மற்றும் “வாரிமி” இனத்தை சேர்ந்த ஆஸ்திரேலியப் பூர்வகுடி மக்கள் தான். அவர்கள் இந்த இடத்துக்கு இட்ட பெயர் “மாலூபிம்பா”. “மாலூபி” என்ற ஒரு வகை செடிகள் இங்கே நிறையக் காணப்பட்டதால் இந்த பெயர் அமைந்திருக்கக்கூடும்.

பின்னாளில் வந்த ஆங்கிலேயர்கள் இங்கிலாந்து நாட்டிலில் உள்ள நியூகாஸில் நகரம் போலவே இந்த இடம் இருந்ததால் இதற்கும் நியூகாஸில் என்றே பெயரிட்டனர் (சென்ட்ரல் ரயில் நிலையப்பெயர் பலகை போல!). நியூகாஸில் நகரத்தில் தான் சிட்னி ஹார்பர் பிரிட்ஜ் கட்டுவதற்கு முன்னோடியான “டைன் பிரிட்ஜ்” உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

நியூகாஸிலின் அதீத நிலக்கரி வளமும், நீர்வளமும் ஆங்கிலேயர்களை வெகுவாகக் கவரவே, இங்கே இருக்கும் நிலக்கரியை ஏற்றுமதி செய்யும் பொருட்டு, 1800-களில் அன்றைய தண்டனைக் கைதிகளை நியூகாஸிலுக்கு அனுப்பி, ஆபத்தான சுரங்கங்களில் பணிசெய்ய வைத்தது ஆங்கிலேய அரசு. “நரகத்தின் நுழைவு வாயிலாக” கருதப்பட்ட இந்த நிலக்கரிச் சுரங்கங்கள் கொண்ட நியூகாஸில் அன்றைய நாட்களில் ஹெல் ஹோல் (Hell Hole) என அழைக்கப்பட்டது. இந்த அவலம் அடுத்த 20 ஆண்டுகளுக்கு தொடர்ந்தது. இன்று நாம் காணும் இந்த எழில் நகரம் , முன்னொரு காலத்தில் “கே .ஜி .எப்” திரைப்படம் போன்று ஒரு சவாலான வரலாற்றை பார்த்த நகரம் என்பதை எண்ணிப்பார்க்கவே அதிர்ச்சியாக இருந்தது.

1820-களில் சாமானிய மக்களும் இடம் பெயர்ந்து விவசாயம் செய்து கொள்ள அனுமதித்தது ஆங்கிலேய அரசு, அதன் பொருட்டு அதுவரை அங்கே நிலக்கரிச் சுரங்கத்தில் பணிபுரிந்து கொண்டு இருந்த கைதிகள் திரும்ப அழைக்கப்பட்டனர். 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த நகரம் வளர்ச்சி பெற ஆரம்பித்தது, நிலக்கரி ஏற்றுமதி தான் தொடர்ந்து இந்த பகுதியின் வாழ்வாதாரமாக அமைந்தது. நாம் இன்று பயணிக்கும் ரயில் பாதை 1830 இல் தனியார் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. நிலக்கரி கொண்டு செல்லவே இந்த ரயில் பாதை பெரும்பாலும் பயன்பட்டது.

எஃகு தயாரிக்க நிலக்கரி மிகவும் அவசியம் என்பதை உணர்ந்த BHP என்னும் நிறுவனம், 1915-இல் நியூகாஸில் நகரத்தில் மிகப்பெரிய எஃகுத் தொழிற்சாலையை நிறுவியது. சுற்றுப்புறத்தை மாசுபடுத்திய போதிலும், அன்றைய நியூகாஸில் வாசிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியது இந்த எஃகுத் தொழிற்சாலை. அது வரை நிலக்கரி நகரமாக இருந்த நியூகாஸில், தொழில் நகரமாக மாறியது.

இதற்கிடையில் நாம் லைட் ரயிலில் ஏறி அமர்ந்தோம், நியூகாஸில் 'இன்டர் சேஞ்' இல் இருந்து புறப்படும் இந்த லைட் ரயில் நியூகாஸில் கடற்கரை ரயில் நிறுத்தம் வரை செல்கிறது. இந்தப் பாதை வெறும் 10 கிலோமீற்றர் தூரம் தான்.

கடற்கரையை ஒட்டிய சாலைக்கு இணையான சாலையில் செல்லும் இந்த ரயிலில் இருந்து நியூகாஸிலின் நகர வாழ்க்கையின் பிரதிபலிப்பைக் காணமுடிகிறது. இந்நாளில் நியூகாஸில் எப்படி உள்ளது என்பதை அறியவும், இங்கே இருக்கும் பல வரலாற்று சுவடுகளை காணவும் தொடர்ந்து நாம் இணைந்து பயணிப்போம் வரும் மாத இதழ்களில்...

**(பயணங்கள் முடிவதில்லை...)**




தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

# மன அழுத்தம் குழந்தைகளுக்கும் வரலாம்!

நேர்காணல் : நேகா

**மனவழுத்தம் குறித்த கேள்விகளுக்குத் பதிலளித்து வரும் சிட்னி பிரபல மனநல வைத்தியர் ரைஸ், இம்முறை குழந்தைகளுக்கான மனவழுத்தம் குறித்து 'எதிரொலி'யுடன் உரையாடுகிறார்.**

**கேள்வி: குழந்தைகளுக்கு மனஅழுத்தம் வருமா?**

**பதில் :** ஆம் வரலாம்! தமக்கு எந்த நோய் வந்தாலும் பரவாயில்லை, தமது குழந்தைகளுக்கு மட்டும் வந்துவிடக் கூடாது என நினைக்கும் நல்லுள்ளம் படைத்தவர்கள் தாம் நாம் எல்லோரும். அப்படிப்பட்ட நமக்கு, குழந்தைகளுக்கும் மனஅழுத்தம் வரலாம் எனும் உண்மை நிச்சயம் கசப்பானதாகத் தான் இருக்கும். 4 முதல் 11 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் நூற்றில் ஒருவருக்கும் 12 லிருந்து 17 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் இருபதில் ஒருவருக்கும் மனஅழுத்தம் வரலாம் என உலகத் தரவுகள் கூறுகின்றன.

**கேள்வி: அப்படியா? வரும் காரணங்கள்?**

**பதில் :** பரம்பரை, வளரும் சூழ்நிலை, ஒப்பீட்டு வறுமை, பெற்றோருக்கிடையில் நடக்கும் சச்சரவுகள், bullying எனும் அதீத கேலிக்கு உட்படுத்தப்படுதல், abuse எனும் மனம் உடல் மற்றும் பாலியல் ரீதியாகக் காயப்படுத்தப்படுதல், கற்றலில் உள்ள குறைபாடுகள் கண்டறியப்படாமலே தண்டிக்கப்படுதல் அல்லது விமர்சனப்படுத்தப்படுதல் போன்ற பல காரணங்கள்.

**கேள்வி: மன அழுத்தம் ஏற்பட்டால் , அவர்களுக்கு (சிறுவர்களுக்கு) என்னென்ன அறிகுறிகள் இருக்கும்?**

**பதில்:** குழந்தைகளுக்கு மனஅழுத்தம் வந்தால், அவர்களின் அறிகுறிகள் வயது வந்தோரின் அறிகுறிகளை விட சற்று வித்தியாசப்படுகின்றன. அவர்கள் தானாக வந்து 'நான் தாழ்வாக உணர்கிறேன்' என சொல்வது அரிதிலும் அரிது. மாறாக, நல்ல கலகலப்பாக இருக்கும் குழந்தை பள்ளியிலும், நண்பர்களோடு சேர்ந்து விளையாடும் விளையாட்டிலும், வீட்டிலும் திடீரென அமைதியாக ஒதுங்கி இருத்தல், எப்போதும் போலில்லாமல் அடிக்கடி எரிந்து விழுதல், அதீத கோபம், படுக்கையில் சிறுநீர் கழித்தல் (ஏற்கனவே இல்லாமல் இருந்து), நகம் கடித்தல், பொருட்களைக் கடித்தல், அவர்களே மற்ற குழந்தைகளை bullying எனும் கேலி செய்ய ஆரம்பித்தல், வன்முறை அதிகமான வீடியோ கேம்களை அதிக நேரம் விளையாடி ஒதுங்கியே இருத்தல், போதைப் பழக்கத்தை பழக ஆரம்பித்தல், ஃபோர்னோகிரஃபியில் மூழ்குதல், படிப்பிலும் விளையாட்டிலும் ஆர்வம் குறைந்து பின்தங்கிப் போதல், கேளிக்கைகளில் ஆர்வம் குறைதல் போன்ற அறிகுறிகள் தான் அவை.

**கேள்வி: பதின்ம வயதுக் குழந்தைகள் பெரும்பாலும் இப்படித் தானே இருக்கிறார்கள்?**

**பதில் :** பதின்ம வயதுக் காலங்களில் வரும் ஹார்மோன் மாற்றங்களால் பல குழந்தைகள் சற்று விலகி ஒரு மார்க்கமாகத் தான் இருப்பார்கள். ஆனால் அவர்கள் கேளிக்கைகளில் ஆர்வம் குறையாமல் இருப்பார்கள்.

**கேள்வி: புலம் பெயர்ந்த குழந்தைகளை மனஅழுத்தம் எந்த அளவு பாதிக்கிறது?**

**பதில் :** மற்ற சராசரிக் குழந்தைகளோடு ஒப்பீடும் போது அவர்களை மனஅழுத்தம் மனப்பதற்றம், தூக்கமின்மை மற்றும் PTSD எனும் மனக்காய நோய் போன்ற மனநோய்கள் இருமடங்குக்கும் மேலாகப் பாதிக்கின்றன. அவர்கள் சொந்த நாட்டில் போரினால் அடைந்த துயரத்தாலும் தஞ்சம் புகுந்த நாட்டில் இருக்கும் மொழி, சூழ்நிலை மற்றும் கலாசார மாற்றங்களாலும் அவர்களுக்கு மனநோய்கள் அதிகம் வர வாய்ப்பிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு உடல் நலக் குறைவுகளும் அதிகம் வர வாய்ப்பிருப்பதாக தரவுகள் சொல்கின்றன.

**கேள்வி: இதற்கு சிகிச்சை உண்டா? அப்படியென்றால் என்னென்ன சிகிச்சைகள் இருக்கின்றன?**

**பதில் :** ஆம் ,நிச்சயமாக சிகிச்சை உண்டு. பொதுவாக குழந்தைகளின் மனஅழுத்தத்துக்கு மருந்தை விட முதலில் மனநல ஆலோசனையையே நாட வேண்டும். முக்கியமாக family therapy என குடும்பத்தார் அனைவரும் பங்கு கொள்ளும் வகையில் ஆலோசனை அமைய வேண்டும். அது கை கொடுக்காத பட்சத்தில் மட்டும் தான் கடைசித் தீர்வாக மருந்தை நாட வேண்டும். அதுவும் பதின்ம வயது ஹார்மோன்கள் மாற்றங்களால் anti depressant களுக்கு அவர்களின் உடல் கொஞ்சம் வேறு மாதிரி வினையாற்றலாம், முதல் சில வாரங்களுக்கு அவர்களை மிகவும் கண்காணிக்க வேண்டும். Start low go slow எனும் தத்துவத்தின்படி மிகக் குறைந்த டோஸில் ஆரம்பித்து மிக மெது மெதுவாக டோஸைக் கூட்ட வேண்டும். மாத்திரை கொடுக்கும் சம காலத்திலேயே மனநல ஆலோசனையும் குடும்ப ஆலோசனையும் தொடர வேண்டும். அதாவது குடும்பமே சேர்ந்து ஒத்துழைத்தால் தீர்வு நிச்சயம்.

**ஒப்பீட்டு வறுமை-** அதாவது வறுமை மட்டுமே குழந்தைகளின் மனஅழுத்தத்துக்கு காரணமில்லை. அவர்களிடம் இருப்பது எங்களிடம் இல்லையே எனும் ஒப்பீட்டு வறுமை தான் அதற்குக் காரணம். முக்கியமாக நகரங்களில் வாழ்வோர் நெருங்கிய சொந்தக் காரர்களின், அண்டை வீட்டாரின் முன்னேறிய நிலையை தனது நிலையோடு ஒப்பிடும் சூழ்நிலை.

கற்றல் குறைபாடுகள்: Dyslexia, Dysgraphia, ADHD போன்ற குறைபாடுகள்.


மருத்துவர் ரைஸ்

MoneyQuest FINANCE SPECIALISTS


Money Quest Endeavour Hills is here to help you!

No matter what type of property you're looking for, the professional team at MoneyQuest Endeavour Hills can help you find the right home loan.

As loan experts, you can rely on MoneyQuest Endeavour Hills to have your best interests at heart. With experience and integrity, we guide you towards products that suit your needs.

We can help with:

- Home Loans
- Refinance Loans
- Investment Loans
- Construction Loans
- Car and Vehicle Loans
- Debt Consolidation



Nathan Sivakanthan

உங்கள் தேவைகள் குறித்து தமிழில் உரையாட தொடர்பு கொள்ளுங்கள்

Call us on 0404 053 746 or email nathan.sivakanthan@moneyquest.com.au

Sivayoganathan Sivakanthan is a Credit Representative (No. 535478) of Money Quest Australia Pty Ltd, Australian Credit Licence 487823.

Visit our website!


MARVEL STUDIOS
MS MARVEL
Original series
June 8 only on
Disney+
©2022 MARVEL



# சென்ற இடமெல்லாம் வெறுப்பு: பா.ஜ.க. எம்.பிக்கு எதிர்ப்பு!

பாசிசம் மற்றும் மதவாதம் என்னும் கருத்தியல்கள் இன்று உலகம் முழுவதும் ஒரே மாதிரியான எதிர்ப்பைப் பெற்றிருக்கின்றன. அதற்குச் சிறந்த உதாரணம், இந்துத்துவத்தையும், முஸ்லிம் எதிர்ப்பையும், பிரிவுவாத வெறுப்புணர்வையும் உக்கிரமாகப் பரப்பி வரும் இந்தியாவைச் சேர்ந்த பா.ஜ.க. எம். பியான தேஜஸ்வி சூர்யாவுக்கு, ஆஸ்திரேலியாவில் எழுந்திருக்கும் எதிர்க்குரல்களும், போராட்டங்களும்.

## யார் இந்த தேஜஸ்வி சூர்யா? இவருக்கு ஆஸ்திரேலியாவில் என்ன வேலை?

இந்தியாவின் கர்நாடகா-தெற்கு தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும், இந்துத்துவ அமைப்பான ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச் சேர்ந்தவரும், பாரதிய ஜனதாக் கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவருமாக இருப்பவர் தேஜஸ்வி சூர்யா. ஆஸ்திரேலிய இந்தியா யூத் டயலாக் (AIYD) என்ற அமைப்பு நடத்தும் கருத்தரங்கில் பேசுவதற்கு வருகை தந்துள்ள இவர், சிட்னி மற்றும் மெல்பர்ன் நகரங்களில் பாஜக ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தனி நிகழ்ச்சிகளில் பேசுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தநிலையில், தனது மதவாதக் கருத்துக்களால் பலமுறை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் சர்ச்சைக்குள்ளான இவர் எவ்வாறு இந்தக் கருத்தரங்கில் அழைக்கப்பட்டார் என்பது இன்னும் பலருக்கு விளங்கவில்லை. AIYD தரப்பிலிருந்தும் முழுமையான பதில் தரப்பட்டதாகத் தெரியவில்லை.

## ரத்து செய்யப்பட்ட முதல் நிகழ்ச்சி

தேஜஸ்வி சூர்யா மாணவர்களிடம் உரையாடுவதற்காக, Education Centre of Australia (ECA) என்கிற தனியார் அமைப்பு, பாராமட்டாவில் உள்ள சுவின்பர்ன் பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு கூடுகையை ஏற்பாடு செய்திருந்தது. பொதுமக்கள், மனித உரிமைப் போராளிகள், கல்வியாளர்கள் என பல தரப்பினரிடம் இருந்து கிளம்பிய எதிர்ப்பால், சுவின்பர்ன் பல்கலைக் கழகம் பேச்சுவார்த்தையின் பின், இந்தக் கூடுகை ரத்து செய்யப்பட்டது.

## வன்மத்தைக் கக்கும் தேஜஸ்வி

அதன்பிறகு, சிட்னியில் ஒரு நிகழ்ச்சியில் பா.ஜ.க. ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய தேஜஸ்வி சூர்யா, 'இந்தியாவின் வரலாற்றிலேயே இஸ்லாமியப் படையெடுப்புதான் மிகவும் கொடூரமாகவும், இரத்தக் களரியாகவும் இருந்தது' எனக் கூறினார். அதுமட்டுமல்லாமல், இஸ்லாமிய சமுதாயம் வன்முறையையும், தீவிரவாதத்தையும் அடிப்படையாகக் கொண்டது எனவும் வன்மத்தைக் கக்கினார்.

தமிழ் மக்கள் திராவிட சித்தாந்தத்தில் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர் என்று திராவிட இயக்கம் குறித்தும் தனது ஒவ்வாமையையும் அவர் தெரிவித்தார்.

## வலுக்கும் எதிர்ப்பு

இத்தகைய சூழலில், ஆஸ்திரேலிய வாழ் கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், ஆஸ்திரேலியன் அலையன்ஸ் அகைன்ஸ்ட் ஹேட் (AAAH) எனும் இளையோர் அமைப்பு, The Humanism Project மற்றும் பல சமூகக் குழுக்கள் தங்கள் கவலையையும், தேஜஸ்வி சூர்யா வருகைக்கு எதிர்ப்பையும் தெரிவித்திருந்தன.

சுமார் ஆராயிரத்துக்கும் மேற்பட்ட கையெழுத்துக்களைப் பெற்று, தேஜஸ்வியின் விசாவை இரத்து செய்ய ஒரு ஒன்லைன் மனுவும் தொடங்கப்பட்டுள்ளது.

பல சமூகக் குழுக்களும், மாணவர் சங்கங்களும், மனித உரிமை ஆர்வலர்களும், அரசியல் பிரமுகர்களும் எழுப்பிய எதிர்ப்பால், ஆஸ்திரேலிய இந்தியா இளைஞர் உரை




யாடல் நிகழ்வின் இணையத்தளத்தில் இருந்த தங்களது லோகோக்களையும், ஆதரவையும், பெறுநிறுவனங்களும் கல்வி நிறுவனங்களும் நீக்கிக் கொண்டன.

ஜூன் 4ஆம் தேதி, ஆஸ்திரேலியன் அலையன்ஸ் அகைன்ஸ்ட் ஹேட் (AAAH) இளைஞர் அமைப்பும், விக்டோரியா இஸ்லாமிக் கவுன்சில் மற்றும் பல சமூக அமைப்புகளும் இணைந்து, மெல்பர்ன் நகரில், தேஜஸ்வி சூர்யா பேசவிருந்த அரங்கின் முன்பு ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின. இதில் சுமார் 300 முதல் 400 வரையிலான பல்லின கலாசார மக்கள் கலந்து கொண்டு, பாசிசத்துக்கு எதிரான முழக்கங்களை, அரங்குக்குள் உள்ளவர்களின் இதயத்துக்குள் எதிரொலிக்கும் வண்ணம் எழுப்பி,, தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். தேஜஸ்வி சூர்யாவின் வருகை காரணமாக AIYD 2022 மாநாட்டில் இருந்து ஆஸ்திரேலிய பிரதிநிதி வெளியேறினார். வன்மத்தையும், பிற மதங்கள் , இனங்கள் மீது வெறுப்பையும் கக்குபவர்களுக்கு தேஜஸ்வி சூர்யாவுக்கு ஏற்பட்ட அவமானம் ஒரு பாடம்.

**● கோகுலன், சிட்னி**



ஊழிக்காலம்-2

33



# புயலுக்குப்பின்...

சமுகமாகப்போவது போல தோன்றினாலும் இப்போதும் பார்வதி பெரும் தொல்லைக் குள்ளானாள். தனது வேலை களைக்கூட அவளால் செய்ய முடியவில்லை காரணம் பிள்ளைகள், தமது தலை விகளால் தொல்லைக் குட்படும்போது அவளி டமே ஓடிவந்து முறைப்பட்டனர். அன்று மாலை பிள்ளைகள்,

"இரவு முக்கியமான நிகழ்ச்சி தொலைக் காட்சியில் இருக்கிறது. அதை எல்லோரும் பார்க்கவேண்டும்" என்று கூறினர். ஆனால் இரண்டாம் புளொக் லீடர் தனக்கு வேலை யிருப்பதாகவும் அது முடியத்தான் ரீவி போட லாம், என்றும் கூறிவிட்டாள். பார்வதி பேசாமல் திரும்பிவிட்டாள்.

எந்த அதிகாரிகளிடம் தான் அதிகாரத்தை தர மாட்டேன் என்று அதிகாரி சொன் னானோ, அதே பழைய புலிகளின் பொறுப்பா ளர்கள் கையில்தான் இப்போது படிப்படியாக நிர்வாகம் இருந்தது. அதிகாரிக்கு இவர்கள் பழைய லீடர்கள் என்பது தெரியாது. உண்மை யில் பெரிய பொறுப்புகளில் இருந்தவர்கள் இங்கே தானுண்டு தன்பாடுண்டு என்றுதான் இருந்தார்கள். அவர்களது தோற்றத்தை மட்டுமே கவனித்து அவர்களுக்கு பொறுப்பை வழங்கியிருந்தான் மேஜர். அவனையறியா-மலே நடந்த விடயம் அது.

பார்வதி எப்போதும் தன்னால் முடியாது என்று எதையும் தள்ளி வைத்ததில்லை. மந்திரங்களையும், சுலோகங்களையும் கற்றுக்கொண்டு வழிபாடு ,தியானம் என்று அமைதியாக இருந்தாலும் அவளால் எழு-தாமல் மட்டும் இருக்க முடியவில்லை. அன்று முழுதும் எழுதினாள். மாலை யில் திரைப்படம் ஒன்று பார்த்தாள். நாளைய நிகழ்ச்சிகள் பற்றி ஆலோ சனை கேட்டு ஏழாம் அணித்தலைவி வந்தாள்.

"நான் என்ன பிள்ளை சொல்லுறது. சொன் னாலும் உங்கட தலைவி ஏற்கவேணுமே. போய் உங்கட தலைவியிட்டக் கேள்.. அவா மாட்டனென்டா என்னட்ட வா" என்றாள். அவள் போய்விட்டாள்.

விடுதலைப்புலிகளின் முழு வழங்கல் பொறுப்பாளரே இப்போது லீடராக இருந்தாள். போராளிகளின் வழங்கல் என்றால் மருத்துவப்போராளிகள் அடங்கலா கத்தான். சத்துள்ள மாமைட், கோர்லிக்ஸ், முட்டை நெஸ்டோமோல்ட் என பல வகை கள் வரும். அதைவிட களங்களுக்கு உலர் உணவாக பலகார வகைகள் செய்வதும் அவள்தான். சாதாரணப் போராளிகளைவ-ிட ஒரு படிமேலாகவே அவளுக்கு சாப்பிடக் கிடைக்கும். அதனாலேயே அவள் தன் உடலை பயில்வானைப்போல வளர்த்திருந்தாள்.

சப்பறம் போன்ற தன் உடலை அசைத்து அசைத்து அதிகாரம் செய்து திரிந்தாள். ஆரம்பத்தில் பிள்ளைகளின் உடைகளைச் சீர் செய்து தைத்துக் கொடுக்க கட்டணம் அறவிட்டவளும் இவளே. பிள்ளைகளுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படும் தண்ணீரைக் கூட, பதினைந்து லீற்றர்தான் தருவேன் என அடம் பிடித்தாள். தனது குடிசையுள் நூற்று முப்பது லீற்றர் தண்ணீரைப் பிடித்து வைத்திருந்தாள். இன்னும் அடுத்த புளொக்கிலிருந்து வரும் தனது முன்னாள் பொறுப்பாளர்களுக்கு மேலும் தண்ணீர் பிடித்து வைத்து அவர்களை இங்கேயே குளிப்பாட்டி னாள். தனது அயல் குடிசைகளுக்கு தொட்டி கட்டி (தறப்பாளில்தான்) நீர் நிரப்ப வைத்தாள். இதனைப் பொறுக்க முடியாத சிலர் மனதுக்குள் பொருமித்திரிந்தனர். இயக்கத்தில் அவளுக்கு கீழ்ப்படிந்து நடந்ததாலோ என்னவோ இங்கேயும் அவளை எதிர்க்க அவர்களது மனதார முடியவில்லை.

மூவர் கொண்ட குழு பார்வதியுடன் பேச்சு வார்த்தைக்கு வந்தது.பார்வதி அவர்களிடம்,

"என்னிடம் பேசிப்பயனில்லை. நீங்க அங்கேயே போய் கதையுங்கோ" என்று கூறி விட்டாள். அவர்கள் உடனேயே போய் தலைவி யிடம் கேட்டார்கள்.

"பத்தாயிரம் லீற்றர் தண்ணீர் அடித்திருக் கிறார்கள். அதை முன்னூற்று நாற்பது பேருக்கு பிரித்தால் ஒருவருக்கு இருபத்தொன்பது லீற்றர் வரும். எங்களுக்கு அவ்வளவு வேண்டாம், இருபது லீற்றர் தாங்கோ"

"ஓ! அப்பிடியோ? இஞ்ச நான் சொன்னதைத் தான் நீங்க செய்யலாம்.அவ்வளவுதான் தருவன். நீங்க ஏலுமெண்டா குடுத்துப் பாருங்கோ. அப்ப தெரியும்" என்று சீறினாள் அவள், "சரி இண்டைக்கு தாங்கோ. நாங்க குடுத்துக் காட்டுறம்." என்றனர் பிள்ளைகள்.

"சரி குடுங்கோ. குடுத்தாத்தான் உங்களுக்கும் பிரச்சினை தெரியும் "என்று எடுத்தெறிந்து பேசிவிட்டுப் போனாள்.

ஆனால் அந்தப்பெண்கள் அதை சவாலாக ஏற்றுக் கொண்டு, அன்றைய தினம் தண்ணீர் வழங்கலை செய்தனர்.வெற்றிகரமாக ஒவ்வொருவருக்கும் தலா இருபத்தைந்து லீற்றர் தண்ணீர் வழங்கி அனைவரது பாராட்டையும் பெற்றார்கள்.

ஆனால் இதை கொஞ்சமும் பொறுத் துக் கொள்ள முடியாதவளாக இரண்டாம் புளொக் யோகாவிடம் போய் ஆலோசனை கேட்டாள். இப்போது சந்திரா இதை அறிந்து வந்து பார்வதியிடம் சொன்னாள்.

"அட விடுபிள்ளை பணிஸ்மென்ற் பண்ணை யில நிண்ட அனுபவம் பிள்ளையள் எப்பிடி யெல்லாம் அடக்கி வைக்கிறதெண்டது அவளுக்குஅத்துப்படி. அதுதான்அங்கபோறாள் யோசனை கேக்க, மேஜர் எதை செய்ய மாட்ட னெண்டு சொன்னானோ அதே நடந்திட்டுது."

"என்ன மம்மீ?"

"பின்ன முழுக்க முழுக்க இயக்கப் பொறுப் பாளரிட்டதானே இப்ப அதிகாரம் போட்டுது"

"மம்மீ ,பண்ணையில விஜியக்கா தானே நிண்டவா. யோகா எப்ப வந்தது?"

முத்தையன் கட்டில் இரு பெரும் பண் ணைகள் இயக்கத்தால் நடத்தப்பட்டு வந்தன. ஒன்று ஆண்களுக்கானது. மற்றது பெண்களுக்கு. இயக்கத்திலிருந்து விலக விரும்பி தம்மை விலத்திவிடுமாறு போராளிகள் ஒரு கடிதத்தை ஒரு துண்டுச்சீட்டில் எழுதி தமது பொறுப் பாளரிடம் கொடுத்தால் அவர் இயக்கத்தால் விலக்கப்படுவார். ஆனால் உடனே வீட்டுக்குப் போக முடியாது. ஆறு மாதம்முதல் இரண்டு வருடம், ஐந்து வருடம் என வருடக்கணக்கில் தண்டனைக்காலம் உண்டு. அது முடிந்த பின்பே அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்படுவார். சில வேளை தனது விலகலை மீளப்பெற்றாலுகூட அவர் புதிய போராளியாகவே கணிக்கப்பட்டு மீண்டும் பயிற்சி எடுக்கப்பட்டு புதிய இலக்கத்திலேயே பதிவாகுவார். அவருடைய பழைய பதவியோ நிலையோ போனது போனது தான். இந்த துண்டு கொடுத்தவர்களுக்கான பணிஸ்மென்ற் பண்ணைகளே முத்தையன் கட்டில் இருந்தன. அங்கே விவசாயம் செய்தார்கள்.

இதனைஆரம்பித்தபோது அதற்குப்பொறுப் பாக இருந்தவள் விஜி . முப்பது வயதைக் கடந்த வளாக இருந்தாள். அருகிலேயே ஆண்களுக் கான பண்ணைப் பொறுப்பில் காயமடைந்த போராளியான மதன் இருந்தான். கொடுக் கல் -வாங்கல், கூலிப்பரிமாற்றம் என இவர் களிடையே ஏற்பட்ட தொடர்பு காதலாகிவிட் டது. சினிமாப் பாணியில் வேலிபாய்ந்த சந்திப்பு களும் நடக்கவே பொதுமக்கள் பார்வையில் வந்து விட்டது. இதையறிந்து இருவரும் விடுதலைப்புலிகளின் திருமணக்குழுவுக்கு தமது காதலை தெரிவித்து திருமணத் துக்கு அனுமதி கோரிவிட்டனர்.

"பிறகு அந்தக் கலியாணம் நடக் கேல்ல. ஏன்?"

"உண்மையில் நடந்தது என்ன? மதன் அந்த கிராமத்திலேயே வயதில் குறைந்த சொத்துபத்துள்ள, குலங்கோத்திரம பார்த்து ஒரு பெண்ணை தன் திருமணத்துக்காக தெரிவு செய்து அந்த வீட்டுக்கும் அடிக்கடி போய் வந்து கொண்டிருந்தான். பண்ணை லாபநட்டக்கணக்கு பார்த்தவன்தானே .இதிலும் அதையே பார்த்தான்."

"பிறகு?"

"இயக்கத்தில குலம் கோத்திரம் பாக்க விட-ாயினம் தானே. ஒருநாள் இயக்கத்தைவிட்டு ஓடிப்போயிற்றான்"

"பாவம் விஜியக்கா பிறகு என்ன செய்தா?"

"அவா போய் இயக்கத்தில முறைப்பாடு செய்தா அவனைப் பிடிச்சு தனக்கு கலியாணஞ் செய்து வைக்கச்சொல்லி, கலியாணக் குழுத்தலைவர்தான் காவற்துறைக்கும் பொறுப்பு அவனைப் பிடிச்சவைதான். அவன்ர சேவைக் காலத்தை வச்சு ஆறுமாதத்தில அவனை விட்டிட்டினம்."

"அப்ப விஜி அம்போதானா?"

"அவன் தான் நினைச்ச பெட்டைய கலியாணஞ் செய்திட்டான். விஜிக்கு வேற கலியாணஞ் செய்து தரலாம் எண்டு சமாதா-னம் செய்தாலும், அது பிள்ளையாற்ற கலியாணமாத்தான் போய்க் கொண்டிருந்தது. கலியாணக் கனவோட காத்திருந்த விஜி ஐந்து வருடங்கள் காத்திருந்தபின், கர்ப்பமாக இருந்தாள் என தெரிய வந்தது."

"அட கடவுளே இயக்கத்திலேயா?"

(இன்னும் வரும்)

---

## எங்களில் இருந்தே தொடங்கப்பட வேண்டும்,

# மாற்றம்!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கப்படுகின்றன. வேலைக்கு வராமல் வீடுகளில் நிற்பதற்கான விருப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. இங்கு உற்பத்திப்பெருக்கம் பற்றி யாரும் இதுவரை பேசவில்லை. செலவுத் தவிர்ப்பு அல்லது செலவுக்குறைப்பு பற்றியே பேசப்படுகிறது. சம்பளமற்ற நீண்ட விடுமுறையில் வெளிநாடு களுக்கு சென்று பணியாற்றுவதற்கான வாய்ப்பு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக இந்த வாய்ப்பினை பயன்படுத்துவதில் முன்னிற்கப்போகும் தொகுதியினராக தகுதியும் தரமும் திறமையும் இருந்தும் தங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்கள் இருக்கப்போகின்றார்கள். மூளைசாலிகளைத் தேடியலையும் அபிவிருத்தியடைந்த நாடுகள் பெருமனதுடன் இவர்களுக்காக செங்கம்பள வரவேற்புடன் கூடிய கதவுகளை அகலத்திறக்கப்போகின்றன. மொத்தத்தில் மூளைசாலிகள் மற்றும் திறமைசாலிகள் வெளியேற்றம் தான் நிகழப்போகின்றது.

**கேள்வி: இந்தச்சூழலில் பிரதான வருவாயைத்தரும் சுற்றுலாத்துறையின் எதிர்காலம் எப்படியிருக்கும்?**

**செல்வின்:** சுற்றுலாப் பயணிகள் தங்கள் சுற்றுலாவுக்கான இடங்களைத் தெரிவுசெய்யும்போது சிலவிடயங்களை முதன்மையாக நோக்குவார்கள். அவற்றில் முதன்மையானது அவர்களின் பாதுகாப்பும் சுதந்திரமான செயற்பாடுகளும். இரண்டாவது தாம் பெறப்போகும் திருப்திக்காக இல்லது மகிழ்ச்சிக்காக செலுத்தப்போகும் விலை. மூன்றாவது தங்கள் பயணங்களின் போது தமக்கு வழங்கப்படும் சேவைகளின் தரம். பொருளாதாரத்தால் சீரழிந்து கொண்டிருக்கும் நாடுக-ளில் இவைகளை உத்தரவாதத்துடன் எதிர்பார்க்கமுடியாது என்றால் அவர்கள் வேறு இடங்களை நாடுவார்கள். இதற்கு இலங்கை விதிவிலக்கல்ல.

**கேள்வி: புலம்பெயர் மக்கள் இந்த நெருக்கடித்தீர்வில் எப்படிப் பங்களிக்கலாம்? அதற்கு அரசின் ஏற்பாடு எப்படி இருப்பது அவசியம்?**

**செல்வின்:** புலம்பெயர் மக்கள் என்று நீங்கள் குறிப்பிடு வது புலம்பெயர் இலங்கைத் தமிழ்ச்சமூகம் என்ற அடிப்படை யில் நான் கருத்துரைப்பதானால் அவர்கள் தங்களது கடுமையான உழைப்பின் சேமிப்பை இந்த தீவுநோக்கி ஏன் திருப்ப விரும்புகின்றார்கள் என்பதனை முதலில் நாங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இந்த தீவிலுள்ள தங்களது இனமக்களின் வாழ்வினையும் வாழ்வாதாரத்தையும் சீரமைக்கவும் இந்தத் தீவில் அவர்களது இறைமையும் நிறை வும் அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்டுதான் இத்தகைய முயற்சிகளில் முன்வருகின்றார்கள்.

2009இல் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பும் பெருவிருப்பு டன் இங்கு வந்தார்கள். ஆனால் மனிதாபிமான சிறு குடும்ப முயற்சிகளுக்கு அப்பால் அவர்களால் முன்னகர முடியவில்லை. ஏனெனில் இலங்கைத் தீவில் கடந்த 70வருடங்களுக்கு மேல் கட்டிவளர்க்கப்பட்ட இனவாதப்பூதத்தின் கருமை-மயம் உண்மையில் சாதாரண சிங்கள -பௌத்த மக்களிடம் இல்லை. அது பெயரளவில் அரசியல்வாதிகளினால் முன்ன கர்த்தப்பட்டாலும் அதனை உள்ளிருந்தும் பின்னிருந்தும் இயக்குபவர்கள் இனவாதப் புத்திஜீவிகளும் உயர் நிர்வாக அதிகாரக்கதிரைகளில் அமர்ந்திருப்பவர்களுமே. அதனால்தான் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆட்சி மாறி மறுகட்சிவந்தாலும் தமிழ்மக்களுக்கு மேலான கட்டமைக்கப்பட்ட வன்செயல்கள் எவ்வித தடுமாற்றமும் இன்றி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. இவை மாறாதவரை புலம்பெயர் மக்களின் முயற்சிகள் யாவும் எதிர்பார்த்த விளைவினைத் தரமாட்டா. இந்நிலை மாற்றப்படவேண்டும்.

வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் புலம்பெயர் தமிழ்மக்கள் நெருக்கடிகள் இன்றி தங்களது தொழிலாண்மைகளை உருவாக்கு வதற்கு ஏதுவான சிறப்பு இடைக்கால ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்படவேண்டும். பல்வேறு திணைக்களங்கள், முகவரகங்கள், அரசியல் தரகர்கள், ஆகியோருக்குப் பின்னால் அலைந்து பின்கதவால் காரியங்களை வென்றெடுக்கும் நாகரிகம் மாற்றப்படவேண்டும். ஆட்சிமாறும் போது புதிய ஆட்சியாளர்களினால் வாக்குறுதிகள் மீறப்படும் வழமை இல்லாதொழிக்கப்படவேண்டும். புலம்பெயர் மக்களின் எல்லாத் தொழிலாண்மை முயற்சிகளும் முதலீடுகளும் அவர்களது இரண்டாவது தாயகமான இந்த நாடுகளின் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களால் காவலிடப்படவேண்டும். அதுவரை சிறிய முயற்சிகளுடன் புலம்பெயர்மக்கள் தங்கள் முனைப்புக்களை ஒடுக்கிக்கொள்ளவேண்டும்.

**கேள்வி :இதைப்பற்றி தமிழ்க்கட்சிகள், தமிழ்த்தரப்பிலுள்ள ஏனைய செயற்ட்டாளர்கள் யாராவது பேசலாமல்லவா?**

**செல்வின்:** நிச்சயமாக. தற்போதும் அவர்கள் பலவிடயங்களைப் பேசிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசும் தருணங்களில் பெரும்பாலான சிங்கள நாடாளுமன்ற தோழமைகளுக்கு அவசர வேலைகள்(?) வந்துவிடுகின்றன. அதனால் எங்கள் தலைவர்களின் பேச்சுக்கள் 'விழலுக்கு இறைத்த நீராகின்றது' என நம்புகின்றேன்.

**கேள்வி :அரசாங்கத்தையும் ராஜபக்சக்களையும் மட்டும் குற்றம்சாட்டிவிட்டு பலரும் தப்புவது சரியா? அரச உயர் அதி-காரிகள், பொறுப்புமிக்க அத்தனை உத்தியோகத்தர்கள், மக்கள் அமைப்புக்கள் எல்லாவற்றுக்கும் இந்தச் சீரழிவிலும் நெருக்கடியிலும் பொறுப்பு உண்டுதானே?**

**செல்வின்:** நிச்சயமாக. எந்தவொரு மக்களால் தெரிந்தெடுக் கப்பட்ட நாடாளுமன்ற அங்கத்தவரும், அமைச்சரும் ,அரசாங்க காசோலையில் கையொப்பமிடமுடியாது. அமைச்சின் செயலாளர்களும் திணைக்களத்தலைவர்களும் அதற்கென ஆணையளிக்கப்பட்ட அலுவலர்களும் மட்டும் தான் அதற்கான தத்துவத்தையும் கடப்பாட்டையும் கொண்டிருக்கின்றார்கள். முன்னைய காலங்களில் அமைச்சுக்களுக்கென நிரந்தரச் செயலாளர்கள் என்ற முறைமை இருந்தது. அமைச்சர்கள் மாறி-னாலும் ஆட்சி மாறினாலும் செயலாளர்களை இலகுவில் மாற்ற முடியாது. அமைச்சர்கள் அந்தச் செயலாளர்களின் துறைசார் நிபுணத்துவ வழிகாட்டல்களுக்குள் மட்டும் நின்றுகொண்டு தங்களது நெறிப்படுத்தல் உத்தரவுகளை வழங்குவர்.

ஆனால் பிற்காலத்தில் அமைச்சருக்கு விருப்பமான எடு-பிடிவேலைகள் செய்யக்கூடியவர்கள் தான் அமைச்சர்களுக்கு தேவைப்பட்டார்கள். முன்னைய காலங்களில் அரசனுக்கு இடித்துரைத்து சரியான ஆலோசனைகளை வழங்குபவர்களை மந்திரிகள் என்றார்கள். ஆனால் இங்கு 'வீடு கொளுத்தும் இராசாவிற்கு கொள்ளி எடுத்துக்கொடுக்கும் மந்திரியும் அந்த மந்திரிக்கு மண்ணெண்ணெய் திருடிக்கொடுக்கும் செயலாளரும் என்ற அரசியல் கலாசாரம் வளர்க்கப்பட்டுள்ளது. புத்திஜீவிகளில் பெரும்பான்மையோர் காந்தியின் பொம்மைகளைப்போன்று 'தீயதைக் காணாதே, தீயதைக் கேளாதே, தீயதைப் பேசாதே' என நிஷ்டையில் அமர்ந்துள்ளார்கள். மிகக்குறைந்தவர்களே தங்கள் இருப்புக்காக தேசத்தைக் கொளுத்துவதற்கு துணைபோகின்றனர்.

மாற்றம் எல்லாநிலைகளிலும் வேண்டப்படுகின்றது -அது எங்களிலிருந்தே தொடங்கப்படவேண்டியுள்ளது என்பதே நிதர்சனமாகவுள்ளது.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
Security Alarm
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco CARGO™ =

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU